தமிழ் முரசு

1-19

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

தமிழ் முரசு

தொகுதி : க	ஆசிரியர் : ம. பொ. சிவஞானம்	பகுதி கக

பொருளடக்கம்

கடலூர் மாநாடு	தலையங்கம்	...	உ
சமஸ்தானங்களில் விடுதலைப் போர்		...	கரு
செய்திகள்		...	கசு
காதலர்கள் அடிமையானார்கள்	சு. காசிநாதன்	...	கஎ
சென்னை நாகரிகம்	தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	...	உ௦
வடமொழி தேவையா?	மு. கோவிந்தசாமி	...	உஅ
வாழ்க காந்தியடிகள்!	தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	...	ஙச
புதிய அரசியலும் மாகாணங்களும்	ம. பொ. சிவஞானம்	...	ஙசு

கதைகளில் வருவன கற்பனைப் பெயர்களே.

விலை ~~4~~ அணா

1-10-47

கடலூர் மாநாடு

ஆந்திர, கேரள, கன்னட மாகாணங்களில் உள்ள கட்சிகளிடையே அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றில் கருத்து வேற்றுமை நிறைய இருப்பினும் இன உரிமையைப் பொறுத்தவரையில் எல்லாம் இணைந்தே வேலை செய்கின்றன. ஆனால் தமிழகத்தில் மட்டும் நிலைமை வேறு விதமாக இருக்கிறது. அதற்குத் தக்க எடுத்துக் காட்டு அண்மையில் கடலூரில் கூடிய "திராவிடர்" மாநாடேயாகும்.

'மதராஸ் மனதே' 'சலோ மதராஸ்' என்ற கோஷங்களுடன் பதினாயிரக்கணக்கான ஆந்திரர்கள் சென்னையில் 'படையெடுப்பு' நடத்திய ஐந்துநாட்களுக்குப் பிறகுதான் கடலூர் மாநாடு நடைபெற்றிருக்கிறதென்பதை கருத்தில் கொள்ளவேண்டும். தமிழ் இனத்தவரின் தன்மானத்திற்கு ஆந்திரர் அறைகூவல் விட்டபிறகேனும் கடலூரில் கூடிய தன்மான இயக்கத்தவருக்கு ஆந்திரரையும் சேர்த்து 'திராவிடர்' என்று சொல்லும் மயக்கம் நீங்குமென்று பலர் எதிர்பார்த்தனர். தமிழகத்தில் தமிழரசுக் கழகத்தாரின் முயற்சியால் எங்கும் பரவிவரும் இனவுணர்ச்சியை பிரிவினைக் கிளர்ச்சியை ஆதரித்து கடலூர் மாநாடு தீர்மானம் செய்யுமென்றுகூட பலர் எதிர்பார்த்ததுண்டு. ஏனெனில் 'திராவிடர்' என்ற பெயரால் கூடினாலும்கூட கடலூரில் கூடியவர்கள் சுத்தத் தமிழர்கள்தானே!

ஆனால், கடலூர் திராவிட மாநாட்டின் நிகழ்ச்சிகளை, திராவிடக் கட்சியின் தினப் பதிப்பான 'விடுதலை'யில் படித்தறிந்த எவரும் வருந்தாதிருக்க முடியாது.

தமிழர் வேண்டும் அரசியல் யாது? தமிழகத்தின் எல்லைகள் யாவை? தமிழினத்தின் கட்சிகளை ஒன்று திரட்டுவதெப்படி? என்பவைகளைப் பற்றி சிந்தித்ததாகவே தெரியவில்லை. ஆம். மேற்சொன்னவைகளைப்பற்றி இத்தனைநாளும் ஓயாது பேசி வந்த திரு. வி. க.வின் பேச்சில்கூட இவைகளைப் பற்றிப் பிரஸ்தாபமே இல்லை.

தென்னிந்தியாவை வடஇந்தியாவிலிருந்து பிரிப்பதற்கான கிளர்ச்சியில் திராவிடர் அனைவரும் ஒன்றுபடவேண்டுமென்று கடலூர் மாநாடு தீர்மானித்திருக்கிறது. அதற்காக விரைவில் போராட்டம் துவக்கப்போவதாகவும் முன் அறிவிப்புக் கொடுத்திருக்கிறது. போராட்டம் துவங்குமா; இல்லையா? என்பதைப்பற்றி நாம் கவலைப்படப்போவதில்லை. ஆனால் ஆந்திர, கேரள, கன்னட தேசீய இனங்களின் ஆதரவு பெறாத, இனியும் பெறும் என்று நம்பமுடியாத ஒரு கொள்கைக்காக தமிழகத்தில் தமிழர்மட்டும் கூடிப் போர் முரசு கொட்டுவது விந்தையிலும் விந்தை. மேலும், தமிழர் வடக்கே ஆந்திரர்களிடம் போராடித் திருப்பதியையும், தெற்கே மலையாளிகளிடம் போராடி, குமரி முனையுள்பட திருவிதாங்கூர் தமிழகத்தையும் மீட்கவேண்டிய நேரத்தில் அவர்

களுக்குப் பரிவுகாட்டி, "திராவிடநாட்டுப் பிரிவினைக்கு ஒன்று கூடுங்கள்" என்று தமிழரை மட்டும் அழைப்பது தமிழினத்துக்குத் தீமைசெய்வதாகாதா ?

'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற சிந்தனையைக் கிளப்பியவர்கள் நாங்கள்தான், என்று எண்ணத்திற்கு உரிமை கொண்டாடும் திராவிடக் கழகத்தார் அந்த இயக்கத்துக்குப் பாதகம் விளைவிப்பது எதனாலோ ?

'திராவிடஸ்தான்' அடைய விரும்பும் திராவிடக் கழகத்தார் அதிலுள்ள சிக்கல்களைச் சிந்தித்ததாகவே தெரியவில்லை. அது மட்டுமல்ல. சிந்திக்கும்படி தூண்டுபவர்களிடமும் சீற்றம் கொள்கிறார்கள். சிந்திக்கவே மறுக்கும் ஒரு அரசியல் கட்சி தனது கோரிக்கைகளுக்குப் பிற கட்சியினர் ஆதரவு கொடுக்கவில்லையென்று அவர்களை பழித்துப் பேசுவது எப்படி நியாயமாகும் என்பதை திராவிடக் கழகத்தார், முக்கியமாக இளைஞர்கள் இனியேனும் கவனிப்பார்களாக.

தென்னிந்திய தேசீய இனங்களின் ஒற்றுமைக்குத் தமிழரின் எந்தப் பகுதியினரும், எந்தக் காலத்திலும் எதிராக இருந்ததில்லை. ஆனால், ஆந்திரர்தான் தமிழகத்திலிருந்து பிரிந்து போகவேண்டுமென்ற கிளர்ச்சியை முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் துவக்கினர். இன்று அக்கிளர்ச்சி தமிழரைப் பகைத்தும் பழித்தும் பேசும் அளவுக்கு வளர்ந்து வந்திருப்பதைப் 'பகுத்தறிவு' இயக்கத்தார்

அறியாதிருக்க முடியாது. ஆந்திரரை யொட்டி கேரளரும், கன்னடரும் செய்துவரும் கிளர்ச்சியும் அனைவரும் அறிந்ததே.

இந்த நிலையில், திராவிடப் பேரரசு வேண்டுமென்று கூறுவோருக்கு, வேங்கடத்துக்கு வடக்கே வேலையிருக்கின்றதே தவிர, தெற்கே துளியளவும் வேலை கிடையாது. அதைவிட்டு, தமிழ் நாட்டில் தமிழரின் கவனத்தைத் திராவிட இயக்கத்தின்பால் இழுப்பது அறிந்தோ அறியாமலோ தமிழரின் நிலத்தைப் பறிக்கத் திட்டமிட்டு வேலைசெய்யும் ஆந்திரருக்கும் கேரளருக்கும் துணை புரிவதாகும். இது மறுக்கமுடியாத உண்மை.

மேலும், 'திராவிட நாடு' என்ற விஷயத்திலும் திராவிடக் கழகத்தாருக்குள்ளேயே தெளிவான அபிப்பிராயம் இருப்பதாகத் தெரியவில்லை. திராவிட நாட்டின் வடக்கெல்லை விந்தியமலை என்று தமது பேச்சில் அடிக்கடி வற்புறுத்துகிறார் தளபதி அண்ணாத்துரை.

'இன்றுள்ள சென்னை மாகாணமே திராவிட நாடு' என்று கடலூர் திராவிடர் மாநாட்டின் தலைவர் திருவாளர் எஸ். முத்தையா அவர்கள் பேசியிருக்கிறார்.

'ஆந்திரரும் கேரளரும, கன்னடரும் ஆதரிக்காவிட்டால் தமிழ் நாட்டையே திராவிட நாடாகக் கொள்வேன்' என்கிறார் பெரியார் ஈ. வெ. ரா. தளபதிக்கு விந்தியத்தில் இருக்கும் வடக்கெல்லை நிலைவ

ருக்கு வேங்கடம்வரைக் குறுகிவிடும் விந்தையை என்னென்பது! ஒரு நாட்டைப்பற்றி, அதற்குரிய எல்லையைப்பற்றி ஒரே கட்சித் தலைவர்களுக்குள் இவ்வளவு மாறுபட்ட கருத்திருப்பது அரசியல் உலகத்தில் இதுவரையில் கேட்டிராத ஓர் அதிசயம்.

விந்தியமலை மத்திய மாகாணத்தில் இருக்கிறது. எனவே, விந்தியத்தைத் திராவிட நாட்டின் வடக் கெல்லையாகக் கொள்வதாயின், மகாராஷ்டிர, மகா கோசல தேசீய இனங்கள் திராவிடஸ்தானத்துக்கு ஆதரவு காட்டியாகவேண்டும். ஆனால், இன்றுள்ள நிலையில் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி அறியவேமாட்டார்கள். எனவே, விந்தியத்தை வடக் கெல்லையாகக் காட்டுவது சிக்கலை அதிகப்படுத்து கிறதே ஒழிய சீர்படுத்தவில்லை.

'சென்னை மாகாணம்தான் திராவிட நாடு' என்பவர்கள், தென்னிந்திய தேசீய இனங்களின் சுதந்திரக் கோரிக்கையை அறியாதவர்களாகின்றனர். ஆந்திரர் கோரும் 'விசால ஆந்திரத்தில்' ஒரிஸ்ஸாவில் உள்ள கஞ்சம் ஜில்லாவும், ஹைதராபாத்தில் சரிபாதியான 'தெலிங்கானா'வும் அடங்கியுள்ளன.

கேரளர் விரும்பும் 'ஐக்கியகேரள'த்தில் மலையாளத் திருவிதாங்கூர், கொச்சி ஆகிய சமஸ்தானங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கொச்சி சம்மதித்துவிட்டது. சி. பி.யை வெளியேற்றிய திருவிதாங்கூரும் விரைவில் சம்மதிக்கும் என்பதில் ஐயமில்லை.

கன்னடர் கோரும் 'சம்யுக்த கன்னடத்'தில் மைசூர் சமஸ்தானமும் பம்பாய் மாகாணத்திலுள்ள கன்னடப் பகுதிகளும் கலந்தே இருக்கின்றன.

அப்படியே தமிழர் கோரும் புதிய தமிழகத்திலும் திருவிதாங்கூர் தமிழகம், பிரஞ்சுத் தமிழ்கம், புதுக் கோட்டை சமஸ்தானம் ஆகியவைகளும் சேர்ந்தே இருக்கின்றன. அந்தப் பிரதேசங்களில் தமிழகத் தோடு சேரவேண்டுமென்ற கிளர்ச்சியும் தலைதூக்கி நிற்கின்றது.

இவ்வாறு தென்னிந்திய தேசீய இனங்கள் வரை யறுக்கும் எல்லைகளுக்கு மாறுபட்ட வகையில், 'சென்னை மாகாணம்மட்டும் திராவிட நாடு' என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? மொழி வழி மாகா ணப் பிரிவினையைத் திராவிடர் கழகம் ஏற்பது உண்மையானல், அந்த மாகாணங்களின் எல்லைப் பிரச்சினையைமட்டும் புறக்கணிப்பது எப்படி நியாய மாகும்?

தெலிங்கானுவில் ஆந்திரர் அல்லல்படுகின்றனர். கன்னடத்தில் அடக்குமுறை பேய்க் கூத்தாடுகின் றது. பிரஞ்சுத் தமிழகத்தில் கொலையும் கொள்ளை யும் அன்ருடக் காட்சிகளாகி வருகின்றன. அங்கெல் லாம் 'திராவிட' மக்கள்தானே அல்லல் படுகின்றனர்? அவர்களுக்கு ஆதரவு காட்டுவதன் மூலம், திராவிடஸ் தானுக்கு ஆதரவு தேட முயன்று பார்க்கலாமல்லவா? ஆனல், திராவிடர் கழகத்தார் ஆதரவு காட்டவில்லை என்பதுமட்டுமல்ல. தெலிங்கானு ஆந்திரர்களின்-

ஏன்?-மொத்த ஆந்திரர்களின் கருத்துக்கு மாருக, ஐதராபாத் சமஸ்தானம் தனிநாடாவதை அங்கீகரித்தனர். மலேயாளத் திருவிதாங்கூர் விஷயத்திலும் அப்படியே செய்தனர். இன்றும் பெரும்பகுதி கன்னடர் வாழும் மைசூரில் கன்னடர் வெறுத்துத் தள்ளிய போலிச் சீர்திருத்தங்களுக்குத் திராவிடர் தலைவர்கள் புகழ் மாலே சூட்டுகின்றனர். இம்மாதிரி நடந்து கொள்ளும் ஒரு கட்சியை ஆந்திர, கேரள, கன்னட மக்கள் எப்படி ஆதரிப்பார்கள்?

'ஆந்திரர், கேரளர், கன்னடர் ஆதரிக்காத நிலே ஏற்பட்டால் தமிழ் நாடே திராவிட நாடாகும்' என்ற கூற்று இதைவிட வேடிக்கையானது. ஏடுகளிலுள்ளபடி வைத்துக்கொண்டாலும்கூட, நான்கு இனங்களும் சேரும்போதுதான் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் உறவு கொள்ளும்போதுதான் 'திராவிடர்' என்ற வார்த்தை பொருள் பொதிந்ததாகிறது. அப்படிச் சேராதபோது தமிழ் நாடு தமிழ் நாடாகத்தான் இருக்கமுடியுமே தவிர, அதைத் 'திராவிட நாடு' என்பது பொருளற்ற பேச்சு. இதைத் தெரிந்துகொள்ள அதிக அரசியல் ஞானம் தேவையில்லே.

ஏடுகளிலுள்ள கலாசார வரலாற்றின் அடிப்படையில் ஆரியர் — திராவிடர் பிரிவினே வேண்டுமென்போர், அந்த ஏடுகள்கூறும் இன இலக்கணங்கள் இன்று மாறுபட்டுள்ளன என்பதை ஏற்கமறுப்பது எதனுலோ?

ஆந்திர மொழியின் வளம், ஆந்திரரின் பழக்க வழக்கங்கள் ஆகியவை 2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப்போல் இன்று இருக்கவில்லை. இடைப் பட்ட இந்த 2000 ஆண்டுகளில் அவை ஒவ்வொரு துறையிலும் தமிழகத்திலிருந்து விடை பெற்றுக் கொண்டு வடமொழியோடு, வடநாட்டுப் பண்போடு உறவு கொண்டுவிட்டன. தமிழகத்தில் வடமொழிச் சொற்களே இல்லாத, அல்லது வடமொழிச் சொற்கள் மிகக் குறைவாக உடைய தமிழ் நூலையே நாம் நல்ல தமிழ்நூல் என்று போற்றி வளர்க்கிறோம். அதற்கு நேர்மாறாக ஆந்திரர் எவ்வளவுக் கெவ்வளவு வடமொழிச் சொற்கள் அதிகமாகக் கலந்துள்ளன வோ அந்தத் தெலுங்கு நூலைத்தான் நல்ல இலக்கிய மாக எண்ணிப் பெருமைப்படுகின்றனர். பண்பாட்டி லும் அப்படியே. எனவே, வடமொழியை வெறுக் கும்—வடமொழிச் சொற்களைக் கலைச்சொற்பட்டிய லில் கலப்பதும் கூடாது என்று உணர்ச்சி கொண்டு கிளர்ச்சி செய்யும்—தமிழர், வடமொழியோடு, சுருங் கச் சொன்னால், 'ஆரியப் பண்போடு' நாளுக்கு நாள் அதிகமாகக் கலந்துவரும் ஆந்திரரோடு தமிழரையும் ஒன்றாக்கி ஒரே இனம் என்று பேசுவது பொருந்து மா? கேரளர், கன்னடர் நிலைமையும் ஆந்திரரைப் போன்றதுதான்.

இந்த நிலையில் சட்டசபை, மந்திரி சபையோடு கூடிய ஒரு அரசின்கீழ் பிற இனங்களோடு தமிழனத் தார் இணைந்து வாழவேண்டும் என்று கூறுவோர் மேலே நாம் எடுத்துக்காட்டிய சிக்கல்களைச் சிந்திக்க

வேண்டும். ஏன்? இன்றைய சென்னை அரசாங்கத்தின் அநுபவமும் நமது கருத்துக்கு அரண் செய்கின்றது.

மேலும், வாதத்திற்காக திராவிடஸ்தானை அடைய முடியும் என்று வைத்துக் கொண்டாலும், அந்தத் 'திராவிட அரசி'ல் தமிழர்நிலை எதுவாயிருக்கும் என்று நினைக்கின்றபோது நமது நெஞ்சு திடுக்கிடுகின்றது. மேலே நாம் எடுத்துக் காட்டியவாறு விசால ஆந்திரம், ஐக்கிய கேரளம், சம்யுக்த கன்னடம், புதிய தமிழகம் ஆகியவைகள் அவ்வவற்றிற் குரிய நியாயமான எல்லைகளோடு அமைந்து, அவை அனைத்தும் கொண்ட திராவிடநாடு உருவாகுமானால், அதன் மக்கள் தொகை சுமார் எட்டு கோடியாகும். அதில் தமிழர்கள் மூன்று கோடிக்கும் குறைவாகவே இருப்பர். எனவே திராவிட அசெம்பிளியில், அரசாங்கத்தில், தமிழர் சிறுபான்மையினராகவே இருக்கநேரும். தனித்தனி இனமாக நோக்கும்போதுகூட ஆந்திரரே ஜனத்தொகையில் பெரும்பான்மையினர்; கட்டுப்பாடு வாய்ந்தவரும்கூட. அந்தநிலையில் தமிழர் நிலை ஆந்திரரின் நல்லெண்ணத்துக்கு அடிபணிந்து நிற்பதைத்தவிர வேறெதுவாயிருக்க முடியும்? திராவிட நாட்டை ஆளப்போவது யார் என்பதற்குச் சான்று வேண்டுமானால், ஜஸ்டிஸ் கட்சி காலத்தில் பானகல் அரசர், பொப்பிலி அரசர், முனுசாமி நாயுடு ஆகிய ஆந்திரரைத்தவிர வேறு ஒரு தமிழரும் தலைமை அமைச்சர்பதவியை அடையமுடியாமல் போய்விட்டதென்பதை நினைவூட்டுகிறோம்.

அதுமட்டுமல்ல; திராவிட அசெம்பிளியும் அரசாங்கமும் எந்த மொழியில் நடக்குமென்பதைத்திராவிடர் கழகத்தார் இதுவரையில் தெளிவுபடுத்தினார்களில்லை. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மூன்றுக்கும் தாய் மொழியாகிய தமிழிலா நடக்கும்? அது ஒருபோதும் இருக்காது! அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளுவோர்கூட ஆந்திர நாட்டில் கிடையவே கிடையாது. அப்படி ஏற்றுக் கொள்ளுவோருக்கு அரியாசனமும் கிடைக்காது என்பது திண்ணம். திராவிட நாட்டின் ஜனத்தொகையில் தெலுங்கு பேசுவோரே அதிகமாகையால் திராவிட நாட்டின் அரசியல் மொழி தெலுங்காக அமைவது இயற்கை.

'தெலுங்கும் வேண்டாம், தமிழும் வேண்டாம்; ஆங்கிலத்தைப் பொதுமொழியாக்கலாம்' என்று திராவிடர் கழகத்தின் ஆங்கில அறிஞர்கள் கூறலாம். இந்தக் கூற்றுக்கு தமிழ் நாட்டைத் தவிர, மற்ற மூன்று மாகாணங்களிலும் ஆதரவு கிடைக்காதென்பது உறுதி. ஒருவேளை மற்ற மூன்று இனத்தாரும் சேர்ந்து இந்தியைப் பொதுமொழியாக ஏற்பார்களே ஒழிய, தமிழைத் தலைகாட்ட விடமாட்டார்கள். நாம் எதிர்க்கும் இந்தியை அவர்கள் ஒரு முகமாக ஆதரிப்பதே இதற்குத்தக்க சான்று.

திராவிடர் கழகத்தாரைக் கேட்கிறோம். தெலுங்கை, இந்தியை, அல்லது ஆங்கிலத்தை அரியாசனத்தில் ஏற்றிவைத்து, நம் கன்னித்தமிழ் கால் பிடித்து வாழவா திராவிடஸ்தான் கோருகிறீர்கள்? சீற்றமின்றிச் சிந்தியுங்கள். உண்மை விளங்கும்.

தமிழரசுக் கழகத்தின் சார்பில் கூறுகிறோம். திராவிடர் கழகத்திற்கும் நமக்கும் நாட்டுப் பிரிவினையிலே வேற்றுமை இருக்கிறது. நாம் வேண்டுவது வேங்கடம் வரையிலுள்ள தமிழகப் பிரிவினை. அந்தத் தனித்தமிழகம் தமிழரசு நடாத்தும். அந்தத் தமிழரசில் தனி உடைமையைச் சாய்த்து, சுரண்டலற்ற சோஷியலிசம் செங்கோலோச்சும். பிறந்த காலமறியாத, முதுமைக்கோலம் காணாத எங்கள் கன்னித் தமிழன்னை ஆட்சி புரிவாள். இதுதான் நாம் காண விரும்பும் **இன்பத் தமிழகம்.**

இந்த நிலையைத் தமிழர் அடையாதவாறு தடுப்பதாக இருக்கின்றது, திராவிடர் கழகத்தாரின் போக்கு என்பதைத் தமிழ் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சமஸ்தானங்களில் விடுதலைப் போர்

இந்தியா விடுதலை பெற்று புது வாழ்வு பெற்றுள்ள நேரத்தில் சமஸ்தானங்களில் இப்பொழுதுதான் விடுதலைப் போர் துவங்குகின்றது. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே சி. பி. ராமசாமி விரட்டப்பட்ட பிறகு, மன்னர் பொறுப் பாட்சி வழங்க முன் வந்துவிட்டார். ஆனால் மன்னரின் பொறுப்பாட்சிப் பிரகடனத்தில் அங்குள்ள 15 லட்சம் தமிழர்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. சமஸ் தான மக்கள் உரிமை என்பது அங்கு வாழும் தமிழ், கேரள இனங்களின் தனி உரிமைகளையும் தழுவியதாகவே இருக்க வேண்டும் என்பதைத் திருவிதாங்கூர் மன்னரும் அவருக்கு ஆலோசனை கூறுவோரும் மறந்துவிட்டனர் போலும்!

திருவிதாங்கூர் சமஸ்தான காங்கிரசும் அங்குள்ள தமிழரின் உரிமையைப் புறக்கணித்துவிட்டது. 15 லட்சம் தமிழ் மக்களின் ஒரே அமைப்பாகிய திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரசைக் கலந்துகொள்ளாமலே திருவிதாங்கூர் அரசியல் நிர்ணய சபையை அமைத்தது அறிவற்ற செய லாகும். மேலும், தமிழரிடையே செல்வாக்கில்லாத இரண் டொரு சந்தர்ப்ப வாதிகளை அரசியல் நிர்ணய சபைக்கு நியமித்தது திருவிதாங்கூர் தமிழரைமட்டு மல்லாமல், தமிழ் இனத்தையே அவமதித்ததாகும். "பொறுப்பாட்சி வரும் வரை பொறுத்திருங்கள். போராட்டத்தில் உதவி புரியுங் கள்" என்று சமஸ்தான காங்கிரசின் சார்பாக வாதாடிய தமிழர் பலர் உண்டு. ஏன்? சென்னையிலுள்ள தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் கூட இப்படியே கூறிவந்தன. இப்போது பொதுப் புரட்சிப் போர் நின்று, உரிமைக்குத் திட்டமாகும் அரசியல் மன்

றம் அமையும் நேரத்தில் திருவிதாங்கூர் தமிழருக்கு சமஸ்தான காங்கிரஸ் துரோகம் செய்துவிட்டது. இனியேனும் காங்கிரஸ் தலைமையினர் தமிழருக்கு நீதி வழங்குவார்களா? திருவிதாங்கூர் தமிழர்களுடைய கடமை தெளிவாகிவிட்டது. மலையாள ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் துவங்குவது ஒன்றே அவர்கள் முன்னுள்ள வேலை. தமிழகம் அவர்களை ஆதரிக்கும் என்பதில் ஐயமில்லை.

* * *

மைசூர் சமஸ்தானத்தில் மக்கள் நடத்தும் புரட்சி அரசியல் உலகத்தையே அதிர்ச்சி அடையச்செய்து வருகிறது. இந்திய மக்களின் ஏகோபித்த ஆதரவுடன், உரிமைக்காகப் போராடும் மைசூர் மக்களை நசுக்கிவிடலாம் என்று சமஸ்தான அதிகாரிகள் நினைப்பது அவர்களது அகம்பாவத்தைக் காட்டுகின்றதேயொழிய அரசியல் ஞானத்தைக் காட்டவில்லை. மைசூர் திவான் ராமசாமி முதலியார் சிறந்த அரசியல் அறிஞரெனப் பெயரெடுத்தவர். ஆனால், மைசூரிலே அவரது அறிவுத் திறன் மக்களை நசுக்கும் மன்னர் ஆதிக்கத்துக்குப் பயன்படுவதைக்கண்டு தமிழர் வெட்கித் தலைகுனியவேண்டி இருக்கிறது. மக்கள் கோரிக்கைக்கு எதிராக நடப்பதையே தமது வாழ்க்கை லட்சியமாகக் கொண்டுவிட்டார்போலும்! தமிழகத்தில் மக்கள் அரியணை அளிக்க மறுத்ததும் தமது தவறைத் திருத்திக்கொண்டு தமிழருக்கு விழிப்பளிக்கும் வேலையில் இறங்காது அந்நியரிடம் பதவி பெறுவதிலேயே நாட்டம் கொண்டிருந்தார். இன்றும் திவான் பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மைசூர் மக்களின் உரிமையை மறுத்து அடக்குமுறைக் கொடுமைகளில் இறங்கிவிட்டார்.

மைசூரின் வீதிகளிலே துப்பாக்கி வேட்டொலி. இருட் சிறைகளிலே இளைஞர்களின் வீர முழக்கம். ஆஸ்பத்திரிகளிலே படுகாயப்பட்ட மக்களின் பரிதாபக் குரல்கள். கொடுமை! கொடுமை!! இத்தகைய கொடுமை இழைத்த ரத்தக் கைகளுடன், உரிமை என்ற பெயரால் ஓர் உதவாக்கரைச் சீர்திருத்தத்தை மைசூர் அரசாங்கம் வழங்கி உள்ளது. சாய்ந்து வரும் கொடுங்கோலர்களின் வரிசையிலே மைசூர் மன்னரையும் சேர்த்துவைக்க அவரது திவானும், அதிகாரிகளும் திட்டமிட்டுவிட்டனர் போலும்! வீரமுடன் போர்புரியும் மைசூர் மக்கள் வெற்றி பெறுவார்களாக!

செய்திகள்

குளித்தலை:—இவ்வூர் உயர்நிலைப் பள்ளியில் திருச்சி மாவட்ட திருவள்ளுவர் கழகத் தலைவர் திரு. ஜி. வரதராஜப்பிள்ளை தலைமையில் கடந்த செப். 11ல் பாரதி விழா நடைபெற்றது. 'தமிழ் முரசு' ஆசிரியர் திரு. ம. பொ. சிவஞானம் 'பாரதி காண விரும்பிய விடுதலை' என்பதுபற்றி பேசினார்.

தமிழ்த் திருமணம்: கடந்த 28-8-47 திருப்பாதிரிப்புலியூரில் என். வ. தண்டபாணி—தனலட்சுமிக்கும்; கே. ஆர். கிருஷ்ண மூர்த்தி—ராஜலட்சுமிக்கும் தமிழர் முறையில் திருமணங்கள் நடைபெற்றன. 'தமிழ் முரசு' ஆசிரியர் திரு. ம. பொ. சிவஞானம் திருமணங்களை நடத்தி வைத்து 'தமிழர் மணமுறை' என்பதுபற்றி விரிவாகப் பேசினார். பண்ணுருட்டி திரு. திருவேங்கடம் மணமக்களை வாழ்த்திப் பேசினார். சிவானந்தபுரம் திரு. கு. ர. சண்முகம் நன்றி கூறினார். மணமக்களின் சார்பாக தமிழரசுக் கழகத்திற்கு ரூ. 15—0—0 நன்கொடை யளிக்கப்பட்டது.

ஊத்துப்பட்டி:—தமிழரசுக் கழக செயலாளரும், கோவில்பட்டி ரத்னம் ஸ்டோர்ஸ் செயலாளருமான **திரு. மு. கணபதிக்கும்** கடம்பூர் திரு. S. சுப்பிரமணியம் அவர்கள் குமாரி **திருமதி கோமதி அம்மையாருக்கும்** ஊத்துப்பட்டி மணமகன் இல்லத்தில் 22-8-47 காலை 10 மணிக்கு திரு சித்திரபுத்திரனார் முன்னிலையில் சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. பல நண்பர்களால் வாழ்த்துரைகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

குளித்தலை:—கடந்த செப். 11ம் தேதி திரு வையாபுரி சோழகர் இல்லத்தில் த. நா. கா. கமிட்டி அங்கத்தினரும் சிறை சென்ற தேசபக்தருமான திரு. செல்லப்பாவுக்கும் திருமதி கோகிலாம்பாளுக்கும் திருமணம் நடைபெற்றது. சிதம்பரம் என். தண்டபாணி பிள்ளை தமிழ் மணப் பாக்களை ஓதி திருமணத்தை நடத்தி வைத்தார். புலவர் குருசாமி அவர்கள் தலைமையில் திருவாளர்கள் கே. எம். பால சுப்ரமணியம் ம. பொ. சிவஞானம் மற்றும் பலர் தமிழர் மணமுறையை விரித்துரைத்து மணமக்களை வாழ்த்தினர்.

காதலர்கள் அடிமையானார்கள்

சு. காசிநாதன்

(1) சேவலுடன் எழுந்திருப்பாள் வீடு சுத்தம்
செய்திடுவாள். நீரெடுக்க மட்குடத்தை
ஆவலுடன் எடுத்திடையில் ஒன்றிடுக்கி
ஆடிடுங்கை தன்னிலொரு தோண்டிபற்றிப்,
பூவில், அருங்கலவிகள் தீர்ந்(து), உறங்கும் அன்னப்
பொய்கைக்குச் சென்றிடுவாள், நீர்கொணர்வாள்.
காவி நெடுங் கண்ணாள் பேர் **சோதி முத்து;**
கதிர்வருமுன் கடன்முற்றும் செய்துதீர்ப்பாள்.

(2) அகல் விளக்கில் எரிந்து மிகுந்(து)உள்ள நெய்யைத்
தடவிடுவாள் அழுக்கடைந்த கூந்தலின்கண்.
செகம் விளக்கும் மதிமுகத்தில் சிவப்புவைப்பாள்.
சிறுகீரைத் துணைகொண்டு கூழ்குடிப்பாள்
அகங் குளிர்வாள்; கவலையில்லை; அச்சமில்லை
அடுக்காக வெற்றிலை, சுண்ணும்பு, பாக்கு,
புகையிலையும் மறக்காமல் கொண்டு செல்வாள்
புல்லறுக்க வயல்நோக்கிக் களிப்பினோடே.

(3) கரும்பன்ன வளர்வயலின் நடுவரப்பில்
கட்டழகி புல்லறுப்பாள்; அடுத்திருந்த
பெரும்புன்னை மரத்தில் எதிர் பார்த்திருந்து
பின்புறமாய்ப் பூனையைப்போல் மெள்ளவந்து
கரும்பன்ன அவள்விழிகள் பொத்திநிற்பான்;
" **சும்மாநீ விடுமச்சான் தெரியும்** " என்பாள்;
"திரும்(பு)" என்னத் திருப்பிடுவான்; சேர்த்தணைப்பான்;
செவ்விதழ்கள் அதப்பிடுவான் **சின்னசாமி.**

(4) அயல் வளர்ந்து விளைந்துயர்ந்த நற்கரும்பின்
கணுவெல்லாம் முத்தம்; அதற்கருகிலுள்ள
புயல் மறிக்க வளர்ந்தநெடு மூங்கிலுள்ளும்
முத்தங்கள்; புனல் வந்து மோதலாலே
கயல்புரளும் மடைமீது சங்குமுத்தம்;
காதலர்கள் கன்னத்தில் கனிந்தமுத்தம்;
வயலெல்லாம் முத்தங்கள் காண்பதற்கு
வந்திடுவான் சூரியன் முச் சாண்எழுந்து.

(5) "வெகுநேரம் ஆச்சுமச்சான்! புல்லறுக்க
வேண்டாமா?" என்பாள். "நீ குந்துசற்று!
தகுமான சுமை அறுத்துத் தருகிறேன் நான்;
சருகிருந்தால் கொடு கொஞ்சம்." என்றுசொல்லி
மிகஉரிமை யோடவளின் மடிபிடித்து
வெற்றிலைபாக் கெடுத்துக்கொண்(டு) அவளெடுக்கத்
தகுமான புல்லறுத்துக் கொடுத்த பின்பு,
சன்மான மாயதற்கோர் முத்தமீவாள்.

(6) சிலநாட்கள் இவ்வாறே இன்ப நாளாய்ச்
சென்றன; ஈ தெவ்வாறோ ஊரிலுள்ள
பலபேர்க்கும் எட்டிற்று; அவனை எந்தப்
பண்ணையிலும் சேர்க்காமல் ஒதுக்கினார்கள்.
"கலியாணம் செய் அவளை; இன்றேல் சாதிக்
கட்டுக்கட் டிடுவோ"மென் றதட்டினார்கள்.
கலியாணம் செய்திட ஓர் காசுமில்லை;
கடனாகக் கொடுத்துதவு வாருமில்லை.

(7) கொடியோனும் ஏழைரத்தம் குடித்துயர்ந்த
குருசாமி பண்ணைக்குச் சென்றான்; தாழ்ந்தான்.
படியோலை ஒன்றெழுதித் தந்தான்; பின்பு
பலரறியக் கலியாணம் செய்துகொண்டான்.

விடியாமுன் மறுநாளே சோதிமுத்து
குருசாமி வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.
அடிவானம் வெளுப்பதற்குள் சின்னசாமி
ஆள்கணக்காய்ப் பண்ணைக்குச் சென்றுவிட்டான்.

(8) காதலினால் கட்டுண்ட இருவர் தம்மை
கலியாணம் எனும்சடங்கால் கடன்காராக்கி
பாதகனும் உழைக்காமல் கொழுத்தோனுக்குப்,
பொருள்சேரப் பாடுபட விட்டதன்றி
யாதுபயன் கண்டதிந்தப் பாழ் சமூகம்?
எவ்வாறு கடன்கார்நெஞ் சின்பந்துய்க்கும்?
காதலர்கள் சுதந்திரமாய் வாழ்வதெப்போ?
காத்திருக்குமோ இளமைகடன் போமட்டும்?

(9) முன்போலே அவர்களுக்குள் இன்பமில்லை
முப்பானேழ் கடிகையந்தப் பண்ணைதன்னில்
என்பெல்லாம் முறிய பிரிந் துழைத்திளைத்தார்.
என்னசுகம் தாலிகட்டி? அடிமையானூர்
இன்பவாழ் வடிமைக்கெவ்வாறு கிட்டும்?
இவ்வுலகில் ஆண்டான் வேறுள்ளமட்டும்.
பண்பான பழந்தமிழின் ஆட்சிவந்தால்.
பால் தேன் முக்கனிகலந்த வாழ்வுதானே.

சென்னை நாகரிகம்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

பல்கலைக்கழகம்

பொழுது விடியவில்லை. தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்கின்றேன். தூயகாற்று வீசுகின்றது. உடம்பெல்லாம் புத்துயிர் பரவுகின்றது. எழுந்து நடக்கலாமேஎன்று தோன்றுகிறது. நேரே நடந்து செல்கின்றேன். கருங்கடல் வெள்ளை யலைகளை வீசி இன்பக் கூத்தாடுகின்றாள். கடல் கடந்த தமிழரின் வழிவந்தும் எனக்குக் கடல் கடக்கும் துணிவு இல்லை. கடலருகே உட்கார்ந்து விடுகின்றேன். கதிரவன் கர கர என்று எழுகின்றான். உலகினைத்தன் அழகிய நிறமெலாம் பூசி ஒளிரச் செய்கின்றான். திரும்பிப் பார்க்கிறேன். மங்கிக்கிடந்த சென்னை பொங்கிப் பொலிகிறது. ஒருபுறம் பழம் பாலாற்றைச்சேர்ந்த கூவம் கடலோடுகலக்குமிடத்தே புதுப்பாலம் இந்நாளைய சிற்பியின் பெருமையை வளைந்து வளைந்து புகழ்ந்து கிடக்கின்றதே. நேரே செக்கச் சிவந்த கட்டடம் வெள்ளை முடிகளுடன் ஓங்கி வீற்றிருக்கிறது. எனது கல்வித்தாய் இனிதே அரசாட்சி செய்யும் திருவிலக்க மண்டபம் இதுதான்; சென்னைப் பல்கலைக் கழகத் திருக்கோயில் இதுதான்.

நிலப் பரப்பினைச் சுற்று முற்றிலும் பார்க்கின்றேன். அளவிலாத பெருவானம். அளவிலாத பெருங்கல்வி. காலப் பரப்பினையும் அளக்க முயல்கிறது என்மனம். பழைய நினைவுகள் வருகின்றன. கற்ற நினைவும் கேட்ட நினைவும் வாழ்ந்த நினைவும் எல்லாம் சென்னை நகரம் இன்று போல என்றும் அறிவாராய்ச்சி நிலையமாகவே இருந்தது எனக்

கண்டு என்மனம் இன்ப வெள்ளத்தில் துள்ளிக் குதிக்கின்றது. தெற்கு முகமாகத் திரும்புகிறேன். தோமையர் கோயிலின் கோபுரம் எனக்குக் காட்சி அளிக்கின்றது. தோமையர் கிறித்தவக் கொள்கையினை அங்கிருந்து பரப்பியதனை முன்னமே கண்டோம். தோமையர் அறப்பள்ளியைக் கிறித்தவ பெருமானின் பல்கலைக் கழகம் என்று பாராட்டி வரவேற்கும் நூல் சென்னை மாநகரத் தெழுந்த இந்தத் திருக்குறளன்றி வேறு எது? இன்றுள்ள சென்னையின் பொது நிலைமைக்கேற்ப அன்றே எவரும் என்றும் எதிர்பாராத முறையில் பொதுமை அறத்தினைத் திருக்குறள் வெளிட்டது இந்தச் சென்னை மண்ணின் வளம்போலும்.

திருவள்ளுவரை ஏலாசாரியர் என்ற சைனப் பேராசிரியர் எனச் சமணப் பெரியோர் பாராட்டுகின்றனர். சைனப் பெரியோர்களின் அறப்பள்ளியாகவும் திருமயிலை விளங்கியது. சமணர்கள் தமக்குப் பெருவழி காட்டித்தந்து கடவுள் தன்மை பெற்ற பெருமக்களை இருபத்துநால்வர் என எண்ணி அவர்களைத் தீர்த்தங்கார் எனப் போற்றி வருகின்றனர். அவர்களில் நேமிநாதர் என்பாரும் ஒருவர். அமணமாய் நின்ற சமணச் சிலையில் செதுக்கியுள்ள ஆழி கொண்டு இந்த நேமிநாதரின் உருவத்தினைப் பிரித்தறியலாம். இந்தப் பெரியாரின் திருக்கோயில் திருமயிலையில் பேரும் புகழும் பெற்று ஓங்கியது. திருமயிலையில் கோயில் கொண்ட இந்தப் பெருமையால் நேமிநாதரது பெயரே மயிலைநாதர் எனத் தமிழரிடையே வழங்கலாயிற்று. 14வது நூற்றாண்டுவரை இந்தச் சிறப்பு மறையவில்லை என்பது தெளிவாகிறது. அந்த நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் பெரியாரின் பெயர் மயிலைநாதர் என்பதாம். இவர்தான்

நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர். சமணப்பள்ளிகளும் புத்தப்பள்ளிகளும் பல்கலைக் கழகங்களாகத் திருமயிலையில் வளர்ந்தோங்கித் தமிழை வளர்த்த பெருங்கதையினைத் தமிழன் மறக்கமுடியாது.

இவற்றை எல்லாம் எண்ணிக்கொண்டே வரும்போது ஒரு புதிய கருத்து மின்னல்போல திடீர் என விளங்குகின்றது. அருவர் நாட்டு அருவரைப்பற்றியன்றோ பேசி வருகின்றோம். தொல்காப்பியத்தில் முக்காலமும் அறிந்த அறிவரைப்பற்றிக் கேட்டுள்ளோம். முனிவர் என்று ஒரு சில ஆசிரியர் அறிவரைக் கூறுவர் ; வானத்தினை நோக்கி வான் மீன்களை ஆராய்வது வேறு காலத்தை வரையறுத்து 'மழை வரும்—வெயில் வரும்' என்றெல்லாம் கணக்கிட்டுக் கூறும் வான நூலாசிரியர் என்று வேறு சிலர் கூறுவர். அருவர் என்ற சொல்லும் அவர்கள் அறிவாராய்ச்சியும் இந்த "அறிவரை" நினைப்பூட்டுகின்றது. கண்மூடிக் கனவு கண்டு கடவுளையும் உலகினையும்பற்றிக் கண்ட உண்மைகளைக் கூறும் பெரியோர் ஒருபுறம்; அவ்வாறு உள்ளுக்குள்ளேயே ஒளிந்துகொள்ளாமல் வெளியுலகில்கூட வாழ்ந்து கண்ணைத் திறந்து அனைத்தினையும் ஒன்றுவிடாது ஆராய்ந்து உயர ஒளிரும் வான் மீன்களையும் எண்ணிப்பார்த்து அவற்றிற்கும் அவ்வப்போது தோன்றும் காலத்திற்கும் உள்ள தொடர்பினை உய்த்தறிந்து உண்மை கூறுவோர் மற்றொருபுறம். இன்றைய விஞ்ஞானப் பெரியோர் இந்தப் பின்னினத்தினைச் சேர்ந்தவரே. அறிவரும் அருவரும் இந்த இனத்தினையே சேர்ந்தவர் எனலாம். கண்ணாற் கண்டதனைக் கண்மூடியும் கண்டு, கருத்தினைத் திருத்தமாக உருப்படுத்தி உண்மையுணர்ந்து உலகிற்கு உதவுவார் ஆதலின் முன்னினத்தின் உயர்வும் இங்கு உண்டு.

அருவர் நாடு அறிவர் நாடே ஆம். இதனை நிலை நாட்ட எதிர்பாராத மற்றோர் இடத்திலிருந்து அரிய சான்றுகள் கிட்டுகின்றன. அருவர் நாடு என்பதே தொண்டை நாடு எனக் கண்டோம். இந்தத் தொண்டை நாடு காடாக இருந்த கதையும் நாம் முன் கண்டதேயாம். இந்தக் காட்டினைத் தண்டகாரணியம் என இராமாயணம் பேசுவதும் நாம் அறிந்ததொன்றேயாம். இந்தக் காட்டில் ஆங்காங்கே அறிவர் அல்லது முனிவர் தனித்தனியே அறப்பள்ளி அமைத்துக் கொண்டு தம்மைச் சூழ்ந்து நின்ற இளைஞருக்கு அறிவு ஊட்டி வந்தனர் என்பது இராமாயணத்தின் அடிப்படை. அவரைக் காக்க அன்றோ இராமன் தன் வாயை விற்று விடுகின்றான். அந்த அறிவரின் தலைவர் அகத்தியர்; அவர் அன்றோ இராமனுக்கு வில்லும் உதவுகிறார். அகத்தியர் தமிழ் முனி என்பதனை உணர்ந்தால் இந்தக் குறிப்புகளின் நுட்பம் நன்கு விளங்கும். வரலாற்றாராய்ச்சியாளர் ஒருவர் இந்தத் தவப்பள்ளிகள் அந்த அந்த முனிவர் நடத்திவந்த பல்கலைக் கழகங்களே என முடிவு கட்டியுள்ளார்.

பல்கலைக் கழகம் ஒன்றால் பல கட்டங்களும் பலபல பொருள்களும் நினைவிற்கு வருகின்றன. இவை எல்லாம் இல்லாதபோது பல்கலைக் கழகம் எனப் பேசுவது பலருக்கும் நகைப்பினையே விளைக்கும் நம் கல்வி ஆராய்ச்சி கல் ஆராய்ச்சியாக முடிந்துள்ளது. மூளையும் கல்லாய்ப் போவதுதான் இந்த ஆராய்ச்சியின் முடிவு. கட்டடம் முதலியன புறக்கோலங்களே. நாம் அகக் கோலத்தினையே நாடவேண்டும். அறிவு விளக்கமே அகக்கோலம். பேரார வாரப் பெருங் கட்டடம், பெருங்கோலப் பெரும் பணப் பெருந்திருமேனிப் பெரும் பொலிவெல்லாம் வெளிமினுக்கே. நம் பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சியுரைகள் பல காணும்

என்று பலரும் கையை முறித்துக் கொள்கிறார்கள். பழங் காலத்தில் வெட்ட வெளியில் வான்மீன்களின் ஒளியில் இரவெல்லாம் ஆராய்ந்தனர்; கதிரவனோடு உடனோடுவது போல அறிவுகொண்டு உலகெல்லாம் உள்ளத்தினை ஓட விட்டுப் பசுமரத்தடியில் அமைதியாய் நின்று அனைத்தினை யும் ஆராய்ந்தனர். பெண்ணும் ஆணும் வாழுவது எப்படி? மக்களை வளர்ப்பது எப்படி? அரசியலை அமைப்பது எப்படி? என்று படிப்படியாகச் சென்று கடவுளையும் விடாத பெரும்பிடியாகப் பிடித்து ஆராய்ந்தனர். இயற்கை யோடியற்கையாக வாழ்ந்தாலன்றோ அறிவு வளரும்; விஞ் ஞானம் வளரும்; கலை வளரும்; கல்வி வளரும்; களிப்பு வளரும்; களிப்பில் பாட்டு வளரும். இந்த உண்மையினைக் கண்டு இரவீந்தாரும் தம் விசுவபாரதி என்ற பல்கலைக்கழக கத்தினைப் பழமை போல இயற்கைத் தாயின் மடிமீது தவழ்ந்து விளையாட விட்டுள்ளார். ஆதலில் குடிசைக்குக் குடிசை பல்கலைக் கழகம் வளர்ந்தது என்று கூறுவதில் தவறில்லை.

காடான காலத்திலும் இவ்வாறு அறிவர் நாடாகச் சிறந்த அருவர் நாடு, நாடான காலத்தில் உண்மைப் பல் கலைக் கழகமாக வளர்ந்து பரவுவதனைச் சொல்லவேண்டுமா? தொண்டை நாட்டில் காஞ்சிபுரம் இவ்வாறு தலைசிறந்து விளங்கியது. இந்தியாவில் அந்நாளில் விளங்கிய எழு அறிவு நிலையங்களில் இதுவும் ஒன்று என ஓங்கியதோடு, இது கார ணமாக நகரமென்றால் காஞ்சி (நகரேஷு காஞ்சி) யே என வடமொழியாளரும் புகழ்ந்து பாராட்டுமுறையில் சிறந் தெழுந்தது. கம்நாட்டுக் காப்பியமான மணிமேகலையிலும் காஞ்சிமாநகர்ப் பெருமையைக் காணலாம். சீன நாட்டி

லிருந்து வந்து இந் நாட்டினைப்பற்றி எழுதிவைத்த ஹியூன் சாங் வழியாகவும் இந்தப் பெருமையை அறியலாம்:

கல்விப் பிரிவு என ஒன்றினைப் பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன, கல்வி இளமையிலே முடிந்து விடுகிறது என நம்புகின்றோம். இப்போது உலகம் இந்த நம்பிக்கையினை உடைத்தெறிந்து வரக் காண்கிறோம். இளமையில் கம்பனையும் வள்ளுவனையும் முற்றமுடிய அறியமுடியாது போதிய உலக அறிவின்றி அவர்களை உணர்ந்தின்புற முடியாது. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" அதனாலேயே கல்வி கற்று உலகிடை வாழ்ந்தபின் மறுபடியும் கற்க வருகின்றனர் டென்மார்க்கு முதலிய இடங்களில் முதியோர். என்ன தடை?

தோமையர் கோவில் இருக்குமிடத்தின் தமிழ்ப் பெயர் மயிலாப்பூர் என்பதே நினைவிற்கு வருகிறது. தமிழில் இரண்டெழுத்துக்கள் தெரிந்தாலும் மயிலாப்பூர் என்ற உடன் திருவள்ளுவர் நினைவே வரும். அங்குள்ள திருவள்ளுவர் கோயிலும் அங்கு மயிர்முடியும் பெருந்தாடியும் திருநீரும் யோகப்பட்டமும் கொண்டு வீற்றிருக்கும் அவர் உருவமும் என்மனக் கண்ணெதிரே தோன்றுகின்றன. அந்தக் கோயிலிருக்கும் இடத்தேதான் அவர் வாழ்ந்தார் என்றனர் பின்னுள்ளார். அப்படித்தான் அவர் திருக்கோலம் இருந்தது என்று மனக்கண்ணால் கண்டு செதுக்கி விட்டார் ஒரு சிற்பியார். இவற்றிற்கெல்லாம் சான்று என்ன என்று அறிவு கேட்கிறது. அந்த அறியாமை இருள் நீங்க இன்னும் பொழுது விடியவில்லை, திருமயிலாப்பூரில் தான் திருவள்ளுவர் வாழ்ந்து திருக்குறளை இயற்றினர் எனப் பலரும் நம்பிவந்திருக்கின்றனர். இந்த நாலுபேர் போன வழியில் நாமும் சென்று நம்புவதில் கேடொன்றும் இல்லை:

பின்னர்த்தான் திருவள்ளுவர் மதுரைக்குப் போய்த் திருக்குறளினை அரங்கேற்றினாராம், திருக்குறளைத்தந்த திருமயிலை சிறந்ததோர் அறிவுநிலையமன்றோ? வள்ளுவர் வாயிலன்றோ கலைமகள் வீற்றிருந்தாள். அவரிருந்த இடமே பல்கலைக் கழகம்! என்ன என்ன கலை? அறிவுக்கலை, பொருட்கலை, இன்பக்கலை, கடவுட்கலை, அரசியற்கலை, பிள்ளைக்கலை— தனித் தனிச் சொல்லுவானேன்! உலகமாய் பிரிந்த தமிழ்க் கலை அனைத்தும் அங்கு விளங்கவில்லையா? எல்லாச் சாதியினரும் எல்லா மதத்தினரும் எல்லா நாட்டினரும் "இதுவே உண்மை" கல்லூரிகள் அந் நாடுகளைக் காத்துள்ளன. அப்படியே பழைய தமிழ் நாட்டிலும் கல்வி கற்று மணந்து வாழ்ந்தபின் இடையே மனைவியை விட்டுப் பிரிந்து கல்வி கற்க முனிவரிடம் சென்று வாழும் வழக்கம் பெருவழக்காகப் பரவி இருந்தது. இதுதான் கல்விப் பிரிவு. சங்க நூல்கள் இதன் பெருமையைப் பாடுகின்றன. "சாகின்ற வரையிலும் கற்றல்" என்ற எண்ணம் தமிழ் நாட்டில் வேரூன்றியது. இதனாலன்றோ திருவள்ளுவர் "என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு என்று கேட்கின்றார்.

அறிவோரிடம் சென்று கற்கும் பல்கலைக் கழகங்கள் இராமாயண காலத்திலிருந்தன என்பது பழங்கதை அன்று; அருவர் நாட்டுப் பெருவழக்கே என்பது இவ்வளவும் கூறியதால் விளங்கி இருக்கும். முடிவாக மற்றோர் எடுத்துக்காட்டினையும் விளக்குவது நல்லது. திண்டிவனம் என்ற பெயரே காடு என்பதனை நினைப்பூட்டுகின்றது. சங்க காலத்தில் இதற்குக் 'கிடங்கில்' என்பது பெயர். இந்தக் காட்டில் பழங்கால மரபினை ஒட்டி ஒரு பெரியார் சங்க காலத்தில் வாழ்ந்துவந்தார். பல மாணவர்களுக்கு உண்டி

யும் உடையும் உறையுளும் உதவி அறிவூட்டி வளர்த்து வந்தார். "Residenialt University" என்று புகழ்வது இன்றைய பெருமை அன்று. அப்படித்தாமே அறிவூட்டி வளர்ப்பார்க்கு "குலபதி" என்பது பெயர். இடங்கிற் குலபதி சங்கப் புலவரில் ஒருவர். அவர் பாட்டை இன்றும் நாம் பாடலாம்; பாடி இன்புறலாம்.

வள்ளுவரும் அருகரும் தோமையரும் தொடர்பு கொண்ட மயிலையும் அருவர் நாட்டின் வடபகுதியில் கலங்கரை விளக்கும் அறிவு விளக்குமாக ஒளிர்ந்தது என்று கூறத் தட்டில்லை. வள்ளுவர் குறளை ஈன்றெடுக்கும் பொதுமைப் பல்கலைக் கழகமாக விளங்குவதற்கு இதற்கு வாய்ப்புண்டு. வடநாட்டின் எல்லைப்புறமாம் அருவா வடதலையில் அமைந்து நாகரிகக் கலப்பிடமாக வீற்றிருக்கும் வாய்ப்பு ஒன்று; மேலும் கீழ் நாடும் வந்து போகும் உலகப் பெருவாயாம் துறைமுகமாக இருப்பதால் பிற நாடுகளை அறிய நிற்பது மற்றொரு வாய்ப்பு. சென்னை நகரத்தின் அறிவாராய்ச்சி முடிபே வள்ளுவர் போன்ற அந்நாளைய மக்கள் வாழ்ந்து காட்டிய பொதுமை அறமாகும்.

வடமொழி தேவையா?

மு. கோவிந்தசாமி

சில நாட்களுக்குள், S. S. L. C. மாணவர் படிக்கக் கூடிய பிறமொழிகள் பற்றிய அரசாங்க அறிக்கையொன்று வெளியாயிற்று. அதில் வடமொழி விடுபட்டிருந்தது. அதனைக் கண்டதும் வியப்பும் மகிழ்ச்சியுமடைந்தேன். நமது கல்வி யமைச்சர் நாட்டிற்கு நல்லதோர் பணியை மிகத் துணிவுடன் செய்திருக்கிறார்; வடமொழி யுணர்ச்சி கொண்டோரும் இந் நாட்டிற்கு அவர்களிழைத்த தீங்கைத் தெரிந்து விடுதலைபெற்ற அறிவுற்றார்கள் என எண்ணி இன்புற்றேன்.

வடமொழியைப் படிக்க விரும்புவோர் வேணபேர் இருக்க அதனை மறுப்பது முறையா எனக் கேட்கலாம். ஆம், வடமொழியை விலக்கிவைப்பதால் நாட்டிற்குப் பெரு நன்மை யுண்டாகுமானால் அதனை நீக்கித்தான் ஆகவேண்டும். எந்த ஜமீன்தாரனும் ஜமீன் ஒழிப்பு முறையை விரும்பாதிருக்கையில் நாட்டின் நலம் கருதி துணிவுடன் அதனைச் செய்யவில்லையா ?

வடமொழியினால் தமிழ் நாட்டிற்கு என்ன தீமை? என்று கேட்போருக்கு இந்தியாவிற்கு ஆங்கிலத்தினால் என்ன தீமை? என்ற கேள்வியையே விடையாகத் தருகிறேன். 'இந்தியக் குடும்பம்' என எடுத்துக் காட்டுவராயின், யான் 'உலகக் குடும்பத்தை' உணர்த்தி வைக்கிறேன். வடமொழியின் அமைப்பும், அது வளர்க்கும் அறிவும் தமிழ்ப் பண்பிற்கு வேறானவை. 'ருக்' முதலிய மறைகளில் அமைந்த பாடல்கள் தஸ்யூ (தமிழ்)க்களை

விரட்டி, ஒழித்துத் தம்மைக் காக்கவேண்டுமென ஆரியர் வேண்டுவதாகவே உள்ளன. இவ்வுணர்ச்சி வடமொழியாளருக்கும் தமிழருக்கும் மீளாப் பகையை வளர்ப்பதுடன் ஒன்றுபட்டு வாழ்வதற்கும் ஒழியாத் தடையாயுள்ளன. ஆங்கிலோ—இந்தியர் மொழியும் போக்கும், இந்தியருடன் அவர்களை வேறுக்கி வைப்பதுபோல வடமொழியினர் பேசும் மொழியும் தமிழைத் தாழ்த்தி மக்களுடன் அவர்கள் மகிழ்ந்து கலந்து வாழாதபடிப் பிரித்தே வைத்து விட்டது.

சிலர் இம் மொழியைப் பிழைப்புக்காகவே கற்கின்றனர் என்றுலும் படித்த செல்வாக்குள்ள பலரோ இதனைத் தம் இனத்தின் தாய் மொழியாகவும் பண்பை ஆக்குதற்குரிய ஒரே பற்றுக்கோடாகவுங் கொண்டு, பரப்பி, பின் பற்றவுஞ்செய்து இனத்தவரைத் தம் பக்கம் இழுக்கின்றனர். ஆங்கிலம், லத்தீன்போல வடமொழியையும் அறிவுக்காகப் படிப்பதாகப் பலர் ஏய்க்கின்றனர்; ஆனல் வடமொழிக்கு இந் நாட்டில் இடமில்லையெனில், ஆத்திரங்கொண்டு, மீண்டும் அம் மொழியைப் புகுத்தச்செய்யும் முயற்சியையும் அம் முயற்சியில் ஈடுபடும் பெரிய மனிதரையும் நோக்கினல் வடமொழியில் அவர்க்குள்ள 'உயிர்ப் பற்று' புலனுகும். தாய் மொழிக்குரிய இடத்தில் இதுவரை அவர்களுடைய பிள்ளைகள் வடமொழியே கொண்டு படித்தமையால் அதனைத் தாய் மொழியாகவே கருதுதல் தெளிவாகும். அறிவுக்காகவெனில், அது நீங்கினல் இந் நாட்டுத் தமிழர் அனைவர்க்குமல்லவா ஆத்திரம் எழவேண்டும்? ஒரு குழுவினர்க்குமட்டும் வந்ததென்ன?

வடமொழி, என்றும் பேச்சு வழக்கில் இல்லாத மொழியாகையால் இதனைப் படிக்கவே தேவையில்லை. அன்றி இது நாட்டின் அரசியல் மொழியா? உலக அறிவியல் மொழியா? எதுவுமில்லை. பின் ஏன் உரிமை வந்தபின்னும் இதனை விடாமல் பிடித்துத் திரியவேண்டும்.

வடமொழியின் பொது வியல்பு தத்துவ அறிவாகும். சிறப்பியல்பு அரசியல், சமூக, சமய அறிவாகும். சிறப்பியல்பு இன்றைய உலகிற்குதவாத—ஏன்? முரண்பட்டு முற்போக்கை யழிக்கும் சமூக ஏற்றத்தாழ் வமைப்புகள், மூடத்தனத்தின் மேலமைந்த கொள்கை, கொடுமை நிறைந்த அரசியல் இவை கொண்டதாகும்.

பொது வியல்பு, தத்துவ அறிவுடையதாகும். இதனையே இவர்கள் இந்தியாவின் சிறப்பெனக் கூறிக் களிக்கின்றனர். தோன்றிய காலத்தில் வேண்டின் சிறப்பாக விருந்திருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் உலகில் ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்சு, ஏதன்சு முதலிய நாடுகளில் இதனை யொத்த—ஏன் இவற்றை நடைமுறையில் வெல்லக்கூடிய தத்துவ அறிவு பெருகிவிட்டது. இதனைப் பண்டித நேரு தமது நூலில் கூறியுள்ளார்.

இன்றுள்ள மனப்பான்மையில் இவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளவும் முடிவதில்லை. மேலும், வடமொழியிலுள்ள வேதம், உபநிடதம், கீதை முதலாம் எந்நூலையும் ஆங்கிலத்தில் பெயர்த்து விட்டமையால் இனி வடமொழி கற்கத் தேவையில்லை. டாக்டர் இராதாகிருஷ்ணன், அரவிந்தர், சோபானவர் (ஜர்மனி) போன்றோர் எழுதிய வேத, உபநிடத விளக்கங்களே இன்று அவற்றை நன்கு

விவரிக்கின்றனவேயன்றி வடமொழியில் உள்ளனவல்ல. வேத, உபநிடதச் சொற்களுக்கு இக்கால ஆங்கிலத் தத்துவ நூலின் நேரான சொற்களே உயிரும் ஒளியும் அளிக்கின்றன.

ஆகவே, ஆங்கிலங் கற்றவன் வடமொழிச் சிறப்பனைத்தையுங் கவர்ந்துவிடலாம். வீணே வடமொழியில் சுழல வேண்டுவதில்லை. இதனால் எனக்கு 'ஆங்கில மோகமோ' வென ஐயுறவேண்டாம். இன்று வாழ்வை முழுதும் அடைத்துக்கொண்ட விஞ்ஞான அறிவும் பெருகிய பொருள், சரித, கணிதக் கலையறியும்—ஏன்? எந்த அறிவும் ஆங்கிலத்தில் இருப்பதால் அதனை அறியாமல் இனி ஒருவனும் உலகில் அறிஞனாய் வாழ்ந்துவிட முடியாது. இதை அண்மையில் மௌலானா ஆஸாதும் வற்புறுத்தியுள்ளார். எத்துறை யறிவுடனும் வடமொழித் தத்துவ அறிவையும் ஆங்கிலம் தரும். ஆனால், வடமொழியோ பிறநாட்டு தத்துவ அறிவையும் தராததுடன், உலகக் கலை, விஞ்ஞான அறிவையும் தாமுடியாது.

பிளேடோ, அரிஸ்டாடில், காந்த், காம்தே, நீட்சே ரூசோ, வால்டேர், மார்க்ஸ், மாண்டெஸ்க்யூ, லாக்கே, பேகன், ஸ்வீடன்பர்க், எமர்சன் போன்றோரிடம் எழாத தத்துவ அறிவு எவ்வளவுதான் சிறப்பாக வடமொழியில் இருக்க முடியும்?

ஆகவே, பேசவும் உதவாத நாட்டு அரசியல் மொழியாகவும் ஆகாத—பிறமொழியிலில்லாச் சிறப்பினை விளங்க உரைக்கவு மில்லாத—இவ் வடமொழியினை பின் எதற்காகத் தான் கற்கவேண்டும்? அறிவில் இந் நாட்டை இதுவரை

போல அடிமைப்படுத்தவா? தம்மைத் தமிழ் நாட்டுக் குடிகளின் வேறாகக் கருதி உயர்த்திக்கொள்ளவா? சமூக, சமயத் துறைகளில் இதன் துணையால் இன்னும் சுரண்டிக் கொண்டிருக்கவா? ஆம், இவற்றிற்குத்தான் உதவும்; உதவியது.

சிறுபான்மையாக இருந்துகொண்டு பெரும்பான்மைக் கெதிராய்ச் சிலர் தூண்டிச் செய்யும் இத்தகைய குறும்புத் தனங்களால்தான் வட இந்தியாவில் இன்று பெரும் சமூகக் கொலைகளைக் காண்கிறோம். அரசாங்க அலுவலாளரையும் அவரவர் பண்பினருடன் சேருமாறு மாற்றி யனுப்புவதைக் காண்கிறோம். இவற்றின் அடிப்படையாவும் மொழித் தகராறு தான். இனியும் வடமொழியினர் இவ்வழியே செல்வராயின் அதுபோன்ற கொடுமைகள் இங்கும், இன்றில்லாவிடில் இன்னும் பலபத்தாண்டுகளின் பின்னேனும் தாண்டவமாடுமே. இதை நினைத்தாலே நெஞ்சு பதறுகிறது. அறிவுப் பரம்பரை அறியட்டும்!

அருஞ்செயல் பல ஆற்ற வேண்டியிருக்க, வீணே இம்மொழி கற்பித்தற்குரிய செலவை அரசாங்கம் ஏன் ஏற்க வேண்டும்? மீறிக்கற்போர், அவர் இனப் பொருளாளர் வேண்டின் தனியாகக் கல்லூரி கட்டிக் கற்பிக்கட்டுமே! முடியாதா? போட்டிக்கானால் எத்தனையோ விவேகானந்தா கல்லூரிகள் தோன்றுமே!

வாழ்க காந்தியடிகள்!

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

அன்புவெள்ளத்தில் ஓர் அருட்சுழி

பதினாறு அடி—பெரிய பெண் வேங்கை—கொலை பழுத்த கோரப்பல்; இரத்தமூறும் கொடிய நாக்கு—குட்டி போட்ட களைப்பு, இளைப்பு—பாலுக்குப் பிடுங்கும் குட்டிகள்—வயிற்றைப் பிடுங்கும் பசி. கண்டவர் மனம் இரங்குகிறது. இரையும் கிட்டுகிறது. புலியின் வாயில் நீரூறுகிறது; பச்சிளம் புள்ளிமான் குட்டி கண்ணைக் கவர்கிறது. மான் பிழைத்தால் புலி பிழையாது; புலிக்குட்டியும் பிழையாது; புலி பிழைத்தால் மான் பிழையாது—"தருமசங்கடம்". அறத்தில் எழுந்த பெருஞ் சிக்கலாக உலகம் தோன்றுகிறது. அன்புபழுத்த அழகிய பெரியார் வருகிறார். மானும் பிழைக்கின்றது; புலியும் பிழைக்கின்றது; எப்படி? புலியின் வாயில் இவர் விழுகின்றார்; இன்றும் அமர வாழ்வு வாழ்கின்றார். இது தமிழ்ப் புலவர் கண்ட காட்சி. காலச் சக்கரம் சுற்றிக்கொண்டே போகிறது.

சிலுவை ஒன்று புதிதாக எமனுருவம் கொண்டு வெருட்டுகிறது. அமைதி நிலவும் முகம்; அருள் கொழிக்கும் கண்; உலகிற்கு இரங்கி வாடும் உடலம்—இத்தகைய கடவுட் கோலமொன்று அருகே வந்து காட்சியளிக்கிறது. காலையும் மாலையும் சிலுவையில் பதியவைத்து ஆணி கொண்டு பகைவர் பதைக்கப் பதைக்க அறைகின்றார்கள்; எள்ளி நகையாடுகின்றார்கள். முள்ளாரு முடி சூடுகின்றார்கள். உயிரோடு இரத்தம் ஒழுகி ஓடுகிறது; தலை சாயும் தறுவாயிலும் அருளொளியே மிளிர்கிறது, "ஆண்டவனே! அவர்கள் செய்வது அவர்களுக்கே தெரியாது. அவர்களை

மன்னித்தருள்க" என்றே அந்தப் பகைவருக்காக அழுது புலம்பி மன்றாடுகிறது மடலேறிய காதலானது அழகிய திரு வாய். சில நூற்றாண்டுகள் கழிகின்றன.

இடுப்பில் ஒரு சிறு துண்டு கட்டிக்கொண்டு மழுக்க மொட்டையடித்து நிற்கும் ஒரு தமிழ் உருவம் தோன்று கிறது. மக்கள் போய்வரத் தெருக்களை உருப்படுத்துகின் றார்; கல்லையும் முள்ளையும் பெருக்கி வாருகிறார்; புல்லையும் புதரையும் கொத்திக் களைகிறார்; இந்த உழவாரப் படை யாளரிடம் அரசனுடைய ஆட்கள் சூழ நின்று ஆரவாரம் செய்கின்றார்கள். "நாம் ஆர்க்கும் குடியல்லோம். அரசர் ஆனால் எனக்கு என்ன? தரை மகள் என்னைத் தாங்காது புரட்டிவிடுவாளா" என்று பேசிக்கொண்டே கைத் தொண் டினை விடாது செய்து போகின்றார். யானை இவர் தலையை மிதித்துருட்ட அரசர் ஏவலால் ஓடோடி வருகிறது. "அஞ்சு வது யாது ஒன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை" என்று பாடுகின்றார். கொல்ல எழுந்த யானை மெல்ல விழுந்து அன்பாய் அவரடியில் குழைகின்றது. அரசனே அடியவனாக மாறுகின்றான்.

இந்தத் தமிழ் மரபினை இன்று காண விழைகின்றது தமிழ் மனம். இதோ தோன்றுகிறது தமிழ்க் கூட்டம்! ஆனால் தமிழ் நாட்டில் அன்று. தென்னாப்பிரிக்காவில் கடல் கடந்து பிழைக்கவந்த தமிழர் கூட்டம் இது. இவர்க ளிடையே மெல்லிய உருவம் ஒன்று எழுகிறது. தமிழ் உருவம் அன்று; வடநாட்டு மொழி பேசும் உருவம். குஜராத்தி தலைப்பாகை; மேனாட்டில் ஊறிய பண்பாடு. ஆனால் தமிழ் மனம். எனவே, தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன் என்ற தமிழ்ப் பண்பாட்டினை ஏழைத் தமிழ்க்

கூலியாளரிடம் இவர் காண்கிறார், கறுப்பு மக்களைத் தீண்டாதவராகக் கருதும் வெள்ளை மக்களைக் காண்கிறார். அறப்போர், அன்புப் போர் தொடங்குகிறார். இவரை நையப் புடைத்துத் தெரு ஓரத்தில் போட்டுவிடுகின்றனர் வெள்ளையர். அதுபற்றி வெறுப்பே கொள்ளாது விருப்பமே கொண்டு உரிமைக்காகப் போராடுகின்றார். சிறை புகுந்த கறுப்பு மக்கள் பலர். அவர்கள் உள்ளங் கவர்ந்த கள்வனார் இவர். தமிழ் அன்பே வெல்லுகிறது.

இவர் இந்திய நாடு திரும்புகின்றார். விடுதலை வெறியில் கொலைகள் பரவுவது கண்டு அடக்குமுறைச் சட்டங்கள் எழுகின்றன. "சட்டத்துடன் கூடிய கட்டுகளை அன்பினால் தகர்த்தெறிவோம். அறப்போருக்கு அனைவரும் வாரீர்" என்கின்றார். ஏழையினும் ஏழையாய் ஏழைபங்காளனாய்த் தீண்டாமை கண்டு புழுங்குகின்றார். தடியடி பட்டுச் சிறையில் புகுந்து உயிரையும் கொடுக்கப் பலர் திரள்கின்றனர். கத்தியில்லை; குண்டு இல்லை. தன்னையே பலிகொடுக்கும் தாய் நாட்டன்பே உண்டு. இந்தியத் தாய் புத்துயிர் பெற்றுக் கண்விழித்துப் பார்க்கிறாள். "இந்தியாவை விட்டுப் போ" என்ற ஒலி இவர் வாயிலிருந்து எழுந்து உலகம் முழுவதும் இன்பமாய்ப் பரவுகிறது. ஒரு நொடியில் சிறையி லடைபடுகிறார். ஆனால் என்ன வியப்பு! காலம் மாறுகிறது. வெளியே போகின்றார்கள் வெள்ளையர்கள். 1947௵ ஆகஸ்டு௴ 15—இந்திய விடுதலைக்கு அறிகுறியாக மூந்நிறக் கொடி வான் அளாவப் பறக்கிறது. கோயிலில் எல்லாம் தமிழ்ப் பழங்குடிகள் நுழைந்து வழிபடுகின்றார்கள். தீண்டாமை அரக்கனும் சாகின்றான். குடிப்பேயோ குற்றுயிரும் குறை யுடலுமாகக் கிடக்கின்

றது; மூவர்ண கொடியும் அசோகனது அறவாழி கொண்டு அறப்போரின் வெற்றியைப் பாடி ஆடுகிறது.

ஆனால் இந்தத் திருவிழாவில் இந்தப் பெருமானைக் காணோம். விடுதலை எல்லாம் பேச்சளவில் விடுதலையே. மக்கள் ஒன்றுபடக் காணோம். மனம் புழுங்குகிறார். 125 ஆண்டிற்கு மேலும் வாழ்வேன் எனக் குதித்தாடியவர் "சாவு வாராதா" எனக் குமுங்குகிறார். கலகத்தாவில் இரத்த வெள்ளம் புரண்டோடுகிறது. ஒருவர் கழுத்தினை ஒருவர் முறித்துப் பிணக் கூத்தாடுகின்றனர். "நெஞ்சு பொறுக்குதில்லையே". இந்தியாவை வெட்டியே தொலைப்பது என்று எழுந்த போர்த் தீயின் கொலையாட்டம் கொழுந்துவிட்டு எரிகிறது. "இந்து" என்று சில நாட்களுக்குமுன் எள்ளி நகையாடப்பெற்ற இந்தச் "சிறு மாமனிசர்" இன்று மகமதியக் குடிசையில் வாழச் செல்கிறார். இந்தப் பேயாட்டம் நின்றாலன்றி உண்ணுவதில்லை எனப் படுகாடு கிடக்கின்றார். "இந்தக் கொலைத் தீயில் என்னுயிரும் எரிந்து ஒழியட்டும்" என்ற இவருடைய உறுதி மக்கள் மனத்தினை உருக்கிவிடுகிறது. நம்பமுடியாத வியத்தகு செய்கை. வெட்ட ஓங்கிய கைகள் தழுவிப் பிணைந்து இன்புறுகின்றன. "இடி பிடி அடி வெடி குத்து வெட்டு உதை புதை" என்று ஊர்வலம் வந்தவர்கள் "அன்பு இன்பு கூட்டுறவு உடன் பிறப்பு" என்று உள்ளூற உயிரூற வாயூறச் செவியூற முழக்கி ஆயிரங்கணக்கில் அமைதித் திருவிழாக் கொண்டாடுகிறார்கள். உயிர் வாழ உண்டு மகிழ்கின்றார் ஒரு பெருமகனார்.

௬

பாஞ்சாலத்தினை நோக்கின்றார். பாஞ்சாலப் படுகொலையிற் கிளைத்தெழுந்தது அவருடைய அறப்போர். இன்றும் பாஞ்சாலப் படுகொலை பாரதப் படுகளமாகப் பரவு

வது கண்டே அறம் பெருக்கெடுத்தோடுகிறது. "அன்பா, வன்பா வெல்லுகிறது ?" என்று உலகம் பார்த்துக்கொண்டு இருக்கிறது. உயிரையே பணயம் வைத்து விளையாடப் புறப்படுகிறார் முண்டு கட்டிய முது கிழவர். அவருடைய பிறந்த நாள் மற்றொரு முறை வருகிறது. "இளையராய் என்றென்றும் வாழ்ந்து, பழைய தமிழன்பு வழியை வளர்த்தருள்வராக" என்று உலகினர் மனம் எல்லாம் வாழ்த்துகிறது. "வாழ்த்துவதும் தாம் வாழ."

போரிடையே இது ஒரு புதுமை — நம்பமுடியாத புதுமை. அணுக்குண்டு எல்லாம் விளங்குகிறது ; இந்த அன்பே விளங்கவில்லை. விளங்காமற்போனால் என்ன ? கனவிலும் காணாததனைக் கண்ணாற் கண்டபின் கவலை என்ன ? போரினை வென்றனர் பெரியோர்-சர்ச்சில் பெரியார், ஸ்டாலின் பெரியார், ட்ரூமன் பெரியார். இதுவரை வியாசரும் கம்பரும் சயங்கொண்டாரும் கனாக்கண்ட பெரும் போர்களை எல்லாம் சிறுபிள்ளை விளையாட்டாக்கியது உலகப் பெரும் போர். அத்தகைய பெரும் போரில் பெற்றனர் வெற்றி. உலகினை வாழவைத்த வீர வள்ளல்கள் என எல்லாரும் மனமார வாயார வாழ்த்தினர். போர் நின்று இரண்டு ஆண்டுகளாகியும் சமாதானம் ஏற்படக் காணோம். போரிலே ஒன்றுகூடியவர்கள் அமைதியில் வேறுபட்டு நிற்கின்றார்கள். அங்கும் இங்கும் போர் புகைந்துகொண்டே கிடக்கின்றது.

"வினை விதைத்தவன் வினையை அறுப்பான்". அணுக்குண்டினை வீசினர், விரைவில் போர் முடியும் என்று. எதிர்பார்த்தபடி போர் நின்றது. இரண்டு குண்டுதான் செலவு. வெற்றி என்ற விலையில்லாத பெருவருவாய். ஆனால்

இவை எல்லாம் மாயமாய் மறைந்தன. அணுக்குண்டினை விதைத்தவன் அணுக்குண்டினை அறுவடை செய்யவேண்டியதாயிற்று. அணுக்குண்டினைப்பற்றிய ஐயமே வல்லரசுகளை வாட்டுகிறது.

அணுக்குண்டு முறையினை, உலகம் கண்டது. அன்பு முறையையும் காண்கிறது. 'நோபல்' என்ற பெரியார் அமைதி நிலைநாட்டுவதில் சிறந்த மகனுக்கும் ஒரு பரிசில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளார். இந்த இடத்தில் உலகம் காந்தியார் பெயரை எண்ணுவது இயல்புதானே! வாழ்க அமைதி! வாழ்க அன்பு! வாழ்க தமிழ் மரபு! வாழ்க காந்தியே.

PIMPLE Cure

அசிங்கமான முகப்பருக்கள் முகத்தின் சௌந்தரியத்தை பாழ்படுத்தி விடும். சுவாதியின் முகப்பரு நிவாரணியால் சருமத்திலுள்ள பரு, கருப்பு புள்ளிகள், முதலிய படைகளை அகற்றி இயற்கை அழகை மீண்டும் பெறுங்கள்.

SWATHI PRODUCTS, LTD.
MADRAS.

தென் இந்தியாவிற்கு பிரதம ஏஜண்டுகள் :—

ஏர். ஸ்டீபெர் & ஜெனரல் ஏஜென்ஸீஸ் லிமிடெட், சென்னை.

புதிய அரசியலும் மாகாணங்களும்

ம. போ. சிவஞானம்

அரசியல் நிர்ணய மன்றத்தின் வேலை அநேகமாக முடிந்துவிட்டது. அம்மன்றம் தயாரித்த அரசியல் சட்டத்தின் நகலும் மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டது. எனவே, அரசியல் நிர்ணய மன்றத்தார் தயாரித்துள்ள இந்தியாவின் அரசியல் திட்டம்பற்றி பொதுமக்கள் அபிப்பிராயம் கூறவேண்டிய கட்டம் வந்துவிட்டது என்பதில் ஐயமில்லை. அ. நி. மன்றத்தார் தாங்கள் தயாரித்துள்ள அரசியலைப்பற்றி பொதுமக்களின் கருத்தை அறிய கடமைப்பட்டிருக்கின்றனர்.

அ. நி. மன்றத்தின் ஆரம்ப விழாவுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் சின்ஹா என்ற அறிஞர் அமெரிக்க அரசியல் நிர்ணய மன்றத்தின் வரலாற்றை நினைவூட்டினர். 'அதன் நல்ல படிப்பினைகளை நாமும் பின்பற்றுவோம்' என்று உறுதிமொழி கூறினர். ஆனல் நடந்தது என்ன? 'புதிய அரசியல் திட்டம் மாகாண சட்டசபையின் கருத்தை அறிய அனுப்பப்படுமா?' என்று சென்னை அசெம்பிளித் தலைவர் எழுதிக் கேட்டதற்கு, "இல்லை!" என்று அ. நி. மன்ற சார்பில் பதில் கிடைத்தது. இது ஜனநாயகத்துக்கே முரண்பட்டதாகும்.

இந்த அரசியல் நிர்ணய மன்றம் பிரிட்டிஷ் திட்டப்படி அமைக்கப்பட்டதாகும். காங்கிரஸ் கோரி வந்தது வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட—மக்களின் நலன்களை பிரதிபலிக்கின்ற—பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய மன்றமே ஆகும். ஆனல், பிரிட்டிஷ் திட்டம் மாகாண

அசெம்பிளிகளின் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட—இந்து, முஸ்லிம் மதங்களுக்குப் பிரதிநிதித்வம் வாய்ந்த—அரசியல் நிர்ணய மன்றத்துக்கு அடிகோலியது. அன்றுள்ள தவிர்க்க முடியாத நிலைமையில் காங்கிரஸ் விருப்பமின்றி இந்த மன்றத்தை ஏற்கவேண்டி இருந்தது. ஆனால் காங்கிரஸ்—லீக்—பிரிட்டிஷ் ஆகியோரின் முக்கூட்டு ஒப்பந்தப்படி, இந்தியா, பாகிஸ்தான்—இந்துஸ்தான் என்று பிரிக்கப்பட்ட பின்னர் இன்றுள்ள அ. நி. மன்றம் பிரிட்டிஷாரின் மேல் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, காங்கிரஸ் தலைமையினர் பிரிட்டிஷ் திட்டத்தைத் தீயிலிட்டுப் பொசுக்கிவிட்டு பின்வருமாறு செயலாற்றி இருக்கலாம்.

(1) மொழிவாரி மாகாணங்களைப் பிரித்தல்,

(2) ஒவ்வொரு மாகாணமும் வயதுவந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அ. நி. மன்றத்தை அமைத்துக் கொண்டு, தனது அரசியலைத் தானே தயாரித்துக் கொள்ள உரிமை அளித்தல்.

(3) மாகாண அரசியலைத் தயாரித்த பிறகு இந்திய யூனியனில் இணைய விரும்பும் மாகாணங்களின் அ. நி. மன்றங்கள் அனைத்தும் ஒன்றுகூடி மத்திய யூனியனின் அரசியலைத் தயாரிக்க உதவி புரிதல்.

மேற்சொன்னவை அனைத்தும் காங்கிரஸின் அடிப்படை கொள்கைக்குப் பொருந்துவதே ஆகும்.

"இந்தியாவை மொழிவாரி நாடுகளாகப் பிரிப்பதே காங்கிரஸின் கொள்கை" என்று 1919-ல் காங்கிரஸ் தீர்மானித்தது. அதன்படி மாகாண காங்கிரஸ் அமைப்புகளும் திருத்தி அமைக்கப்பட்டன.

1941-ல் கிரிப்ஸ் இந்தியா வந்திருந்தபோது, 'இந்தியாவில் எந்த ஒரு பிரதேசமாயினும் சமஷ்டியில் கலவாது தனித்திருக்க விரும்பினால், அதைக் கட்டாயப்படுத்துவதில்லை' என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்தது. (இந்தத் தீர்மானப்படிதான் பாகிஸ்தான் வழங்குவதாக அண்மையில் கூடிய அ. இ. கா. கமிட்டி கூட்டத்தில் பண்டித நேரு கூறினார்.)

அதிகாரம் கைக்குக் கிடைத்த பின்னர் காங்கிரஸ் தலைமையினர் தமது நெடுநாளைய கொள்கையை அமுலுக்குக் கொண்டுவரத் தவறிவிட்டனர்.

மற்றும் லீகின் கோரிக்கைப்படி இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது. காங்கிரஸ் கோரிக்கைப்படி வங்கமும், பாஞ்சாலமும் துண்டாடப்பட்டன. ஆனால், தென்னாட்டு மக்கள் கோரும் மொழிவாரி மாகாணப் பிரிவினையில் அ. நி. மன்றமோ, அதில் ஆதிக்கம் செலுத்தும் வடஇந்தியத் தலைமையினரோ அக்கறை காட்டவில்லை.

ஆங்கிலேயரின் ஆதிக்கம் நீங்கியதால், பிரிட்டிஷ் திட்டப்படி அ. நி. மன்றத்தார் நடக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாயிற்று. எனவே, முழுஉரிமை பெற்ற அம்மன்றம் பிரிட்டிஷ் திட்டத்திலிருந்த தொகுதி முறையைத் தொலைத்து விட்டது. மேலும், லீக் கோரிய பாகிஸ்தான் பிரதேசங்கள் இந்தியாவிலிருந்து பிரிந்துவிட்டதால் பிரிட்டிஷ் திட்டத்திலிருந்த தொகுதி முறை இயற்கையாகவே உயிரிழந்து விட்டது. ஆனால், அ. நி. மன்றத்தார் தொகுதி முறை நீங்கலாக, இதர வகைகளில் பிரிட்டிஷ் திட்டப்படியே அரசியலை வகுத்திருந்தாலுங்கூட சுதந்தர

இந்தியாவில் மாகாணங்கள் சுதந்திர அங்கங்களாக இருந்திருக்கும். ஏனெனில், அயல்நாட்டு உறவு, போக்கு வரவு, பாதுகாப்பு ஆகிய மூன்றும் மத்திய சர்க்காருக்கு என்றும், ஏனைய எல்லா பொறுப்புக்களும் மாகாணங் களுக்கே என்றும் பிரிட்டிஷ் திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அ. நி. மன்றத்தார் பிரிட்டிஷ் திட்டத்துக்குத் தவறான வியாக்கியானங்கள் செய்தும் திட்டத்தை மீறுவதற்குத் தமக்கிருந்த உரிமை களைப் பயன்படுத்தியும் மாகாணங்களின் உரிமைகளைப் பறித்துக்கொண்டனர்.

பிரிட்டிஷ் திட்டப்படி மத்திய யூனியனின் பொறுப்புக் களை வரையறுக்க திரு. என், கோபால்சாமி ஐயங்கார் தலை மையில் அமைக்கப்பட்ட குழுவினர், மாகாணங்களுக்கு பெரிதும் தீங்கிழைத்துவிட்டனர்.

வட இந்திய மூலதனக்காரர்களுக்குத் தங்கள் மூளையை அடகுவைத்து பலம் வாய்ந்த மத்திய சர்க்காருக்குப் பக்க மேளம் வாசித்தனர். 'போக்கு வரவு' 'அயல் நாட்டு உறவு' 'பாதுகாப்பு' என்ற சொற்களுக்குத் தங்கள் இஷ் டம்போல் விளக்கம் கூறினர்.

'போக்கு வரவு' என்ற தலைப்பில் ரயில், விமானம், தந்தி, தபால், கப்பல் மார்க்கம், வானொலி ஆகியவை எல்லாம் மத்திய சர்க்காருக்கே என வளைத்துக்கொண்டனர்.

'அயல் நாட்டு உறவு' என்ற தலைப்பில் அரசியல் உறவு மட்டும்தான் மத்திய ஆட்சிக்கு உரியதாக இருக்கமுடியும். ஆனால் கோபால்சாமி குழுவினர், வாணிபம் உள்பட வெளி

நாடு சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரங்களையும் தலைமை அரசாங்கத்துக்கு உரிமையாக்கினர்.

'பாதுகாப்பு' என்ற சாக்கில் ராணுவத்துக்கு ஆள் சேர்த்தல், அதைப் பாதுகாத்தல் என்பவைமட்டும் அல்லாமல், ராணுவத் தளவாடத் தொழில்களையும் யூனியன் அரசாங்கத்துக்கு வழங்கிவிட்டனர்.

இவை எல்லாம் பிரிட்டிஷ் திட்டப்படியே பறிக்கப்பட்டவையாகும். இனி, அக் குழுவினர் பிரிட்டிஷ் திட்டத்தை மறுக்க, தமக்குள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தி நிதி, சுங்கம், நாணயச் செலாவணி, கைத்தொழில் திட்டமிடல், ஆகிய எல்லாப் பொறுப்புக்களையும் மாகாணங்களிடமிருந்து பறித்து மத்திய சர்க்காருக்கே உரிமையாக்கிவிட்டனர். அ. நி. மன்ற கூட்டத்தில் ஒரு சில அறிஞர் இதைப் பலமாக எதிர்த்தனர். 'மாகாணங்களின் வளத்தை எல்லாம் மத்திய சர்க்கார் பறித்துவிட்டு, மாகாண அரசாங்கங்களைப் பிச்சை எடுக்க வைப்பதா? "இது அநீதி" என்று எச்சரிக்கை செய்தனர். ஆனால் கோபால்சாமி—அல்லாடி குழுவினர் தம்முடைய "மூளை" பலத்தால் மூலதனத்துக்குப் பரிந்து பேசி எதிர்ப்புக்களை முறியடித்தனர்.

சமஸ்தானங்கள்

மாகாணங்களுக்கு அநீதி இழைத்த இதே அரசியல் நிர்ணய மன்றத்தார் சமஸ்தானங்களை சுதந்திர நாடுகளாக அங்கீகரித்துள்ளனர். இதைக்கண்டு நேர்மையுள்ள எவர் நெஞ்சம்தான் கொதிக்காமல் இருக்கமுடியும்? அன்னியருடன் கூடிக் குலவி நாட்டைக் காட்டிக்கொடுத்த மன்னர் ஆட்சிக்கு, அ. நி. மன்றத்தார் ஆசி கூறிவிட்டனர். அம்

மன்னர்களின் சமஸ்தானங்களில் தனிக் கொடி உண்டு; அதுதான் சமஸ்தானத்தின் உரிமைக் கொடி. இந்திய யூனியனின் மூவர்ணக் கொடி வெறும் உறவுக்காகமட்டும் தான் பறக்கும்.

சமஸ்தானத்துக்கு வெளியே இருந்து வருவார் எவரும் சமஸ்தான நலன்களுக்குத் தீங்கு இழைப்பராயின், அவரை மன்னர் ஆட்சி வெளியேற்றலாம்.

வெளியிடத்து விற்பனைப் பொருள்களின் இறக்குமதியைத் தடுத்து, அல்லது அதிக வரி விதித்து உள்நாட்டுப் பொருள்களுக்குப் பாதுகாப்பு அளிக்கலாம். சமஸ்தானத்துக்கு வெளியே இருந்துவரும் நாடோடி சுரண்டல் வாதிகளை எவரும் சமஸ்தானத்துக்குள் தொழில் நடத்தாதவாறு தடுத்துவிடலாம்.

பிரிட்டிஷ் திட்டப்படி அயல்நாட்டு உறவு, பாதுகாப்பு, போக்குவரத்து ஆகியவைகளைத்தான் சமஸ்தானங்கள் மத்திய அரசாங்கத்துக்கு விட்டுக் கொடுத்துள்ளன. அதுவும் அரசியல் தத்துவப்படி தாங்களாகவே விட்டுக்கொடுத்து மத்திய சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாகத்தான் பொருள். மாகாணங்களைப்போல் அடிமைச் சேர்க்கை அல்ல. ஆம்! இந்தியாவின் விடுதலைப் போரில் துளியளவும் துணைபுரியாததோடு, துரோகமும் செய்த சமஸ்தானங்கள் எல்லாம் சுதந்திர இந்தியாவில் சுதந்திரமாக இருக்கின்றன. ஆனால் சுதந்திரத்துக்காக பல ஆண்டுகளாகப் பாடுபட்டு கண்ணீரும் செந்நீரும் சிந்தி, வெள்ளையரை வெளியேற்றிய மாகாணங்களுக்கு—அதில்

(48-ம் பக்கம் பார்க்க)

செய்திகள்

விவேகானந்தர் கழகம் வ. உ. சிக் கழகமாயிற்று: கடந்த திங்கள் 13ம் தேதி ஞாயிறன்று சென்னை பெரியமேட்டு விவேகானந்தர் தமிழ்க் கழகத்தின் உறுப்பினர்கள் கூட்டம் தலைவர் திரு. மோகன சுந்தரனாரின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் விவேகானந்தர் தமிழ்க் கழகம் என்ற பெயரை மாற்றி **வ. உ. சி. இளைஞர் மன்றம்** என தமிழ் மணக்கும் புதுப் பெயர் இட்டுத் தொடர்ந்து நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. மற்றும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழினத்தின் உரிமைக்கும் தமிழ்நாட்டின் பிரிவினைக்கும் பாடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது.

பழனியில் பாரதி விழா: பழனி தமிழரசுக் கழகத்தார் செப்டம்பர் 11ல் குமரன் விடுதியில் பாரதி நாளைக் கொண்டாடினர். ப. சென்னிவீரன் தலைமையில் திருவாளர்கள் யூசப் மேகர்அலி, சாது சிவசுப்ரமணியம், பழனிச்சாமி ஆகியோர் "பாரதி காணவிருந்த தமிழகம்" என்பதுபற்றிப் பேசினர். பாரதியார் பாடல்களை ஒரு சினிமா முதலாளிக்கு உரிமையாக்கியதைக் கண்டித்துத் தீர்மானம் செய்யப் பட்டது. செயலாளர் நன்றி கூறினார்.

பழனி: தலைவர்: லெ. பழனிச்சாமி; செயலாளர்: க. கருப்பண்ணன்; பொருட்காப்பாளர்: பொ. கந்தசாமி; உறுப்பினர்கள்: வி. சென்னிவீரன், நா. வீரராகவன், பழ. கருப்பசச்சாமி, கா. மு. யூசப் மேகர்அலி, க. சாது சிவசுப்ரமணியம், த. சோமசுந்தரம்.

வ. உ. சி. பிறந்த நாள்: கடந்த செப்டம்பர் 5ல் வேலூர் கஸ்பா கலைவாணி நிலையம், பாரதி நிலையம் ஆகியவற்றின் கூட்டுறவில் வ. உ. சி. பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. திரு மு. கணபதி தலைமையில் திருவாளர்கள் குப்பாச்சாரி, தர்மலிங்கம், அண்ணாமலை ஆறுமுகம், தங்கவேல் ஆகியோர் வ. உ. சியும் தமிழர் கடமையும் என்பதுபற்றிப் பேசினர். சென்னைக் கடற்கரையில் வ. உ. சி. யின் சிலையை வைக்குமாறு அரசியலாருக்கு அறிவிக்கும் தீர்மானம் நிறைவேறியது. திரு. அ. பா. சிவன் நன்றி கூறினார்.

தமிழ்க் கழகம்: ஈரோடு கருங்கல் பாளையம் தமிழ் கழகத்தார் திரு. மீனாட்சி சுந்தரம் தலைமையில் பாரதிவிழா கொண்டாடினர். புலவர். வேணுகோபால், க. ர. ராமசாமி, குன்னையா முதலியோர் பாரதியாரின் கருத்தை விளக்கிப்பேசினர். தமிழகத்தின் பிரிவினையைப் பற்றியும் 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காக்க வேண்டியது தமிழர் கடமை' என்றும் வற்புறுத்தினர்.

திருச்சி ஜில்லாவில் தமிழரசுப் பிரச்சாரம்: தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி. கடந்த செப்டம்பர் 11 முதல் 16ம் தேதி வரை திருச்சி ஜில்லா, செட்டிநாடு முதலிய பகுதிகளில் சுற்றி தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை பிரச்சாரம் செய்து வந்தார். திருச்சி மாவட்ட வள்ளுவர் கழகத்தார் பிரச்சாரத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

11ம் தேதி மாலை ஆறுமணிக்கு குளித்தலை தமிழரசுக் கழகக் கிளையின் ஆதரவில் அவ்வூர் மாரியம்மன் கோவில் முன்பு கூட்டம் நடைபெற்றது. திரு மணிமுத்துசாமி (கிளைக்கழகத் தலைவர்) தலைமை தாங்கினார். ம. பொ. சி. தமிழகம் தனியாக வேண்டிய அவசியத்தை வரலாற்று ரீதியாக வற்புறுத்திப் பேசினார். திருவாளர்கள் எஸ். டி. பாலு, ஆர். கோவிந்தன், சு. சீனிவாசன் முதலியோரும் பேசினர். குளித்தலை தமிழரசுக் கழகம், மாணவர் தமிழரசு மன்றம் ஆகியவற்றின் சார்பில் ம. பொ. சி. க்கு வாழ்த்துத் தாள்கள் வழங்கப் பட்டன.

11ம் தேதி கரூர் நடராஜர் கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் ஜில்லா முன்சீப் ரத்தினசாமி முதலியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சுமார் ஒருமணி நேரம் பேசினார். மண்டபத்தினுள்ளும், மண்டபத்திற்கு வெளியேயும் மக்கள் திரளாகக் குழுமியிருந்தனர். கூட்டத்தில் சரிபாதியினர் பெண் மக்களாவர். உள்ளூர் மாணவிகளும் ஏராளமாக வந்திருந்தனர்.

13ம் தேதி முசிறி உயர்நிலைப்பள்ளி வெளி நிலத்தில் வழக்கறிஞர் திரு. கிருஷ்ணசாமிப் பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்

றது. திரு. ம. பொ. சி. ஒன்றரைமணி நேரம் தமிழ் நாட்டுப் பிரிவினையை சர்வகட்சித் தமிழரும் ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினார். உள்ளூர் பிரபல காங்கிரஸ் வாதி திரு மாணிக்கமும், புலவர் சிவப்பிரகாசரும் கூட்டத்திற்கு எல்லா வித ஏற்பாடுகளும் செய்து உதவியது பாராட்டத்தக்கது.

14ம் தேதி திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. ஜி. வரதராஜப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது. திரு. ம. பொ. சி தமிழரசுக் கழகக் கொள்கைகளை விளக்கினார்.

15ம் தேதி புதுக்கோட்டைத் தனியரசு வேகுப்பட்டியில் தேசியமன்றத்தின் ஆண்டு விழாவில் திரு. ம. பொ. சிவஞானம் தலைமை தாங்கினார். பல்வேறு கழகங்களும், தனிப்பட்ட தோழர்களும் ம. பொ. சி. க்கு வாழ்த்துத் தாள்கள் வாசித்துத் தந்தனர். திருவாளர்கள் கண்ணன், திருப்பத்தூர் கிட்டு, பாரதி நேசன், ஆகியோர் பேசியபின்னர் தலைவர் ம. பொ. சி. தமது முடிவுரையில் தமிழரசுப் போராட்டத்தில் காங்கிரஸ்வாதிகள் கலக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். சுற்றுப்புற ஊர்களிலிருந்தெல்லாம் மக்கள் குழுமினர்.

16ம் தேதி மாலை 6 மணிக்கு காரைக்குடி மகர் நோம்பு பொட்டல் மைதானத்தில் கூட்டம் நடைபெற்றது. நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் தலைமை வகித்தார். திரு. ம. பொ. சிவஞானம் சுமார் ஒருமணி நேரம் பேசினார்.

திரு. ம. பொ. சிவஞானம் பேசிய எல்லா பொதுக்கூட்டங்களிலும் சர்வகட்சி மக்களும் குழுமியிருந்து அவரது சொற்பொழிவைக் கவனமாக கேட்டனர். ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் தமிழ்நாட்டுப் பிரிவினையை உடனடியாகக்காண வேண்டியதன் அவசியத்தையும் தமிழகத்தின் தெற்கெல்லை, வடக்கெல்லை ஆகியவற்றை மீட்கவேண்டிய வழிகளையும் விளக்கிக்கூறினார். திருவிதாங்

கூர் தமிழகம், சித்தூர் ஜில்லா ஆகிய பகுதிகளில் தாம்செய்த சுற்றுப்பிரயாணத்தின் போது அங்குள்ள மக்கள் தமிழகத்தோடு சேருவதில் கொண்டுள்ள ஆர்வத்தைத் தமக்கேற்பட்ட அனுபவத்தைக் கொண்டு அறிவித்தார். நகரத்தைப் பறிக்க ஆந்திரர் திட்டமிடுவதை அலட்சியமாக எண்ணாது விழிப்புடன் இருக்கவேண்டுமென்று எச்சரித்தார். மற்றும், அரசியல் நிர்யணமன்றத்தார் தயாரித்துள்ள அரசியலில் தமிழகத்தின் அரசியல், பொருளாதார உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன வென்பதை தக்க மேற்கோள்களுடன் காட்டினார். தமிழர் விரும்புவது 'சுதந்தர இந்தியாவில் சுதந்தர சோஷலிஸத்தமிழ் குடியரசு' என்பதை தமது ஒவ்வொரு சொற்பொழிவின் இறுதியிலும் வற்புறுத்தினார்;. திருச்சி ஜில்லாகூட்டங்கள் எல்லாவற்றிற்கும் திருவாளர்கள் வையாபுரி சோழகர், புலவர் அரங்கசாமி ஆகியோர்கள் ம. பொ. சி. யுடன் வந்திருந்து வெற்றிகரமாக நடத்தித் தந்தது குறிப்பிடத்தக்கது. திரு. ம. பொ. சி சென்ற இடங்களிலெல்லாம் தமிழரசுக்கழகக் கொள்கைகளுக்கு மக்கள் மனப்பூர்வமான ஆதரவு தந்தனர். பல இடங்களில் கிளைக் கழகங்களும் அமைக்கப்பட்டன.

(45-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழும் தேசிய இனங்களுக்கு மட்டும் சுதந்திரம் இல்லை. சுய நிர்ணயமும் இல்லை. விளக்கமாகச் சொன்னால் "சுதந்திர இந்தியாவில் அடிமை மாகாணங்கள்" என்ற நிலை தவிர வேறு இல்லை.

[அடுத்த இதழில் அரசியல் நிர்ணய மன்றத்தார் தயாரித்துள்ள அரசியலால் தமிழகத்துக்கு — தமிழ் இனத்துக்கு நேர இருக்கும் தீங்குகளை ஆராய்வோம்]

வெளியிட்டோர் : ம. பொ. சிவஞானம், 1.29. இருசப்ப கிராமணி தெரு. திருவல்லிக்கேணி சென்னை. அச்சிட்டோர் திரு. கே. தி. நாகலிங்க முதலியார் செங்குந்த மித்திரன் அச்சகம் சென்னை. ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்

தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0
6 மாதச் சந்தா	ரூ. 3—0—0
தனி இதழ்	ரூ. 0—4—0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 7—0—0
6 மாதச் சந்தா	ரூ. 3—8—0
தனி இதழ்	ரூ. 0—5—0

விளம்பர விகிதம்

(ஒரு இதழில் வெளியிட)

அட்டை (வெளிப்புறம்)	ரூ. 100.
அட்டை (உட்புறம்)	ரூ. 75.
புத்தகத்துள் ஒரு பக்கம்	ரூ. 50.
புத்தகத்துள் அரைப்பக்கம்	ரூ 25.

தமிழ் முரசுப் பதிப்பகம்

திருவல்லிக்கேணி :: சென்னை

Wrapper Printed at the Sengundha Mithran Press, Madras 1